

கிளை தவறிய இலைகள்

கலாபூஷணம்

பூநகர் பொன். தில்லைநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிளை தவறிய இலைகள்

பூநகர் கலாபூசணம்
பொன்.தில்லைநாதன் (J.P)
ஓய்வு நிலை அதிபர்



2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் பற்றிய விபரம்

ஆசிரியர்	: கலாபூசணம் பொன் தில்லைநாதன்
முதற் பதிப்பு	: 2019
உரிமை	: ஆசிரியருக்கு
அட்டைப்படம்	: செல்வன். யோகநாதன் தனுஜன்
அச்சுப்பதிப்பு	: வேழன் பதிப்பகம் – கிளிநொச்சி.
பிரதிகள்	: 500
விலை	: 200 ரூ
பக்கம்	: 60
SBN	: 78-955-44465-0-2
வெளியீடு	: பூநகரி கலாசாரப் பேரவை பிரதேச செயலகம், பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுரை

எனது மூன்றாவது சிறுகதைத் தொகுதியான "கிளை தவறிய இலைகள்" மூலம் வாசகர்களாகிய உங்களைச் சந்திப்பதில் பேருவகை அடைகின்றேன். 2005 ஆம் ஆண்டில் எனது முதல் வெளியீடான "நினைவழியா நினைவுகள்" என்னும் சிறுகதைத் தொகுதியையும் 2013 ஆம் ஆண்டில் "உண்மைகள் ஊமையாவதில்லை" என்ற சிறுகதைத் தொகுதியையும் வெளியிட்டயான் வாசகர்கள் மத்தியில் எமக்குக் கிடைத்த பாராட்டுக்கள், வாழ்த்துக்கள் காரணமாக கடந்த ஆறு ஆண்டுகளில் பல்வேறு சஞ்சிகைகள், பத்திரிகைகளில் என்னால் எழுதப்பட்டு வெளியான சிறுகதைகளைத் தொகுத்து ஒரு சிறுகதைத் தொகுதியாக வெளியிடுவதற்கு எனக்கு ஊக்கமும் வாய்ப்பும் அளித்த பூநகரி கலாசாரப்பேரவைக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு எனக்கு நல்ல அருளை நல்கி உறுதியைத் தந்து கொண்டிருக்கும் நம் குல தெய்வம் கோபாலப்பிட்டி ஸ்ரீ சித்தி விநாயகரை மனதில் இருத்தி வணங்குகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக என்னை எழுத்துத் துறையில் ஈடுபடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து எனது முதல் இரு சிறுகதைத் தொகுதிகளுக்கும் விமர்சன உரை வழங்கி இன்றும் ஊக்குவித்துக் கொண்டிருக்கும் எனது நண்பன் யாழ் பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்வதோடு எனது மனப்பூர்வமான நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாபூசணம் பொன்தில்லைநாதன்,

ஓய்வுநிலை அதிபர்,

பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2019.03.21

'கிளைதவறிய இலைகள்' வெளியீடு சிறக்க வாழ்த்துக்கள்

மனிதவாழ்வியல் சக்கரத்தின் அசைவுகளைமீட்கும் காலக் கண்ணாடிகளான இலக்கியங்களுள் சிறுகதை வடிவத்திற்கு தனித்துவமான இடமுண்டு. அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிமண்ணைத் தன் பூர்வீகமாகக் கொண்டு ஒரு ஆசிரியராக,அதிபராக,சமூகசேவையாளராக இவர் ஆற்றியுள்ள சமூகப்பணிகளுக்கு அப்பால் ஒரு கவிஞராக ,கதாசிரியராக, பேச்சாளராக, இலக்கியவாதியாக, ஊடகவியலாளராக பல்துறைசார் ஆளுமையாளனாக இந்த மண்ணுக்கு திருவாளர்.பொன்.தில்லைநாதன் அவர்கள் ஆற்றி வருகின்ற தமிழ், இலக்கியப்பணி அளப்பரியது.

அதன் வெளிப்பாடாகவே 2005 ஆம் ஆண்டில் தனது முதல்ப் பிரசவமாக 'நினை வழியா நினைவுகள்' என்ற சிறுகதைத் தொகுதியையும், 2013 ஆம் ஆண்டில் 'உண்மைகள் ஊமையாவதில்லை' என்றசிறுகதைத் தொகுதியினையும் வெளியிட்டு அதன் தொடர்ச்சியாகதனது மூன்றாவது படைப்பான 'கிளைதவறிய இலைகள்' என்றசிறுகதைத் தொகுதியினை இன்று வெளியிட்டு வைப்பது மனநிறை வளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுநாள் வரையிலும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்துவாசகர் மனங்களை வென்ற தனது சிறுகதைகளை தொகுத்து,அதற்குநூல் வடிவம் கொடுத்திருப்பதும்,தனது இந்தப் படைப்பினூடுதற்காலசமூகத்தில் முதியவர்கள் படும் அவலங்களைவெளிப்படுத்துவதும் இப்படைப்பினைமேலும் சிறப்பிப்பதாகவேஅமைந்துள்ளது.

இந்தமண்ணின் வலிகளையும்,உணர்வுகளையும் தாங்கி வெளிவரும் 'கிளைதவறிய இலைகள்' சிறுகதை வெளியீடு சிறப்புறவும், இதழாசிரியர் திருவாளர்.பூநகர்.பொன்.தில்லைநாதன் அவர்களின் கலை இலக்கியப்பணிதொடரவும், இந்த மாவட்டத்திற்குமேலும் பெருமைசேர்க்கும் வகையில் இலக்கிய ஆர்வலர்களைமகிழ்விக்கும் அவரதுபடைப்புக்கள் தொடர்ந்து வெளிவரவும் இறையாசிகளை இறைஞ்சி மனப்பூர்வமாக வாழ்த்திநிற்கிறேன்.

சிவஞானம் சிறீதரன்
பாராளுமன்றஉறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

செல்வச் செழிப்பு மிக்க பூமியாம் பூநகரி தனிலே உதித்த சிறந்த சிறுகதை எழுத்தாளர் பூநகர் கலாபூஷணம் பொன். தில்லைநாதன்.அவர்களின் "கிளை தவறிய இலைகள்" என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியீடு வருவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். பூநகரி மண்ணின் பெருமையை உலகறிய செய்வதற்கு முன்னின்று உழைக்கின்றவர்களுள் ஒருவராக பொன். தில்லைநாதன் அவர்கள் விளங்குகின்றார்.

கலை இலக்கியங்கள் என்பது எமது வரலாற்று அடையாளங்கள். அவை விலைமதிக்க முடியாத அழியாத சொத்துக்களாக மிளிர்கின்றன. பண்பாடு விழுமியங்களை பிரதிபலித்துக் காட்டுவதற்கு கலை இலக்கியங்கள் காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது. அந்த வகையில் காலத்தின் தேவை அறிந்து பொன். தில்லைநாதன் அவர்களினால் முன்னெடுக்கப்படும் இம் முயற்சியானது எமது பூநகரி பிரதேசத்திற்கு பெருமை தரக்கூடிய விடயமாக காணப்படுகின்றது.

சிறந்த ஆசானாகவும் அதிபராகவும் சமூக சேவையாளனாகவும், எழுத்தாளனாகவும், கவிஞனாகவும் கலைத்துறை நடிகனாகவும். ஊடகத்துறையாளனாகவும் சாரணிய சேவையாளனாகவும் என பல்வேறு துறைகளில் தடம் பதித்த பொன்.தில்லைநாதன் அவர்களின் 2005 ம் ஆண்டு வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுதியினான"நினைவழியா நினைவுகள்" 2013 ம் ஆண்டு வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுதியான " உண்மைகள் ஊமையாவதில்லை" போன்ற சிறுகதை தொகுப்புக்களுடன் " கிளைதவறிய இலைகள்" என்ற சிறுகதை நூலும் இணைவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறான மூத்த கலைஞர்களை ஊக்குவிப்பதன் மூலம் இளம் தலைமுறையினரிடத்தே இலைமறைகாயாக இருக்கின்ற கலைப்படைப்புக்களை வெளிக்கொணர்வதற்கு ஊக்குமூட்டுவதாக விளங்கும். அத்துடன் பொன். தில்லைநாதன் அவர்களின் கலைப்படைப்புக்களை பெருமைப்படுத்தும் முகமாகவும் கலைநகரி மற்றும் கலைக்கிளி, கலாபூஷணம் போன்ற கலை விருதுகளும் இவரின் கலைப்படைப்புக்கு கிடைத்த வெற்றியாகும்.

இவர் இன்னும் பல நூல்களை வெளியிட்டு பூநகர் மண்ணின் சிறப்புக்களை உலகறிய செய்யவேண்டும். என்பதுடன் மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.சி.ச.கிருஷ்ணேந்திரன்
பிரதேச செயலாளரும்,
கலாசார பேரவையின் தலைவரும்
பிரதேச செயலகம், பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வகை அழகுடன் தனக்கென தனித்துவமான அடையாளங்களுடன் சிறந்து விளங்கும் பூநகரியில் கலைத்துறைக்கு பஞ்சம் ஏற்பட்டு விடாது. எழுத்துருவாக்கங்கள் மூலம் கலைப்பணி ஆற்றிக் கொண்டிருக்கும் கலைஞர்களில் கலாபூசணம். பொன்.தில்லைநாதன் அவர்கள், பூநகரின் கலைத்துறை வரலாற்றில் இடம்பெறத்தக்க பெருமைக்குரியவராவார். அரச துறையில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு ஒதுங்கியிருக்காது இன்றும் துடிப்புடனும் சுறுசுறுப்புடனும் பல்வேறு பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கும் பொன்.தில்லைநாதன் அவர்கள் இன்றைய சமூகத்தினருக்கு ஒரு உதாரண புருஷனாக திகழ்கின்றார்.

அரச துறையில் பல்வேறு பதவிகளை வகித்த பொன்.தில்லைநாதன் அவர்களின் அனுபவங்கள், வாழ்க்கைப் பாடங்கள் அவரின் எழுத்துருவாக்கங்களில் வெளிப்படுத்தப் படுகின்றமை சிறப்பான அம்சமாகக் காணப்படுகின்றது.

பொன்.தில்லைநாதன் அவர்கள் தன்னை ஒரு கலைஞர் என்பதற்கு அப்பால் ஒரு சிறந்த பத்திரிகையாளராகவும் தனது செயற்பாடுகள் மூலம் அடையாளப்படுத்திக் கொண்டிருக்கின்றமையானது பூநகரிற்கு ஒரு வரப்பிரசாதமாகும். பூநகரியின் சமூக பொருளாதார அரசியல் விடயங்களினையும் அன்றாட நிகழ்வுகளினையும் அறிய ஆவலுடன் இருக்கும் மக்களின் அவாவினை நிறைவு செய்யக்கூடிய வகையில் தனது பணியினை பத்திரிகைத் துறையில் பதிவு செய்து கொண்டிருக்கின்றமை பாராட்டத்தக்கது.

ஒரு பத்திரிகையாளனானவன் கலைஞனாகவும் காணப்படும் போது தான் சார்ந்த சமூக விடயங்களுக்கு அதிக

முக்கியத்துவம் கொடுத்து நேர்த்தியுடன் செய்தியினை பிரசுரிப்பான் என்பது சமூகத்தின் எதிர்பார்ப்பும் கூட..... அந்த வகையில் சமூக விழுமியங்களுடன் செய்திகளை வழங்குவதுடன் பத்திரிகைகளின் வாயிலாக கதைகளினையும் வெளியிட்டு இலக்கியப்பிரியர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2004ம் ஆண்டு "நினைவழியா நினைவுகள்" எனும் 1வது சிறுகதைத் தொகுதியானது பத்திரிகைகளில் வெளியிட்ட தனது கதைகளினை உள்ளடக்கிய வகையில் வெளியிட்டு கலை விருந்தளித்ததுடன் தனது கலை ஆர்வத்தையும் வெளிப்படுத்தி உள்ளார். அதனைத் தொடர்ந்து 2013ம் ஆண்டு "உண்மைகள் ஊமையாவதில்லை" எனும் சிறுகதைத் தொகுதியினை வெளியிட்டு தனது கலைப் பணியினைத் தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் கலாபூஷணம் பொன். தில்லைநாதன் அவர்களினால் "கிளை தவறிய இலைகள்" எனும் 3வது கதைத்தொகுதி மூலம் வாசகர்களினைச் சந்திக்கவுள்ளமை எங்கள் எல்லோருக்கும் சந்தேகத்தினைத் தருகின்றது. இச்சிறுகதைத் தொகுதியானது 8 கதைகளினை உள்ளடக்கியதாக அவை ஒவ்வொன்றும் பல்வேறுபட்ட பின்னணியினையும் கொண்டு புனையப்பட்டிருப்பதுடன் எழுத்தாளரின் வாழ்க்கை அனுபவங்கள், தொழில் அனுபவங்கள் என்பவற்றினையும் சிறப்பாக வெளிக்காட்டி நிற்கின்றன.

தலைப்புச் சிறுகதையான "கிளை தவறிய இலைகள்" எனும் கதை இன்றைய காலகட்டத்தில் பல இடங்களில் அவதானிக்கக் கூடிய நிதர்சனமான உண்மைச் சம்பவத்தினை எளிய மொழி நடையில் வெளிக்காட்டுகின்றது என்றே கூறலாம். பெற்றோரின் நல்வழிகாட்டலில் வளர்க்கப்படும் பிள்ளைகளும் பல சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் தங்கள் வாழ்க்கையினைத் தொலைத்துத் தடுமாறி நிற்கின்றமை எங்கள் சமூகத்தில் பாரிய சவாலான விடயங்களினைத் தோற்றுவிக்கின்றது. ஒரு குழந்தை வளர்ந்து நற்பிரஜையாக சமூகத்தில் திகழ்வதற்கு பெற்றோரின் வழிகாட்டலுக்கு அப்பால் ஒரு நல்ல சமூகச் சூழலும் காணப்பட வேண்டும் என்பதனை புடம்போட்டுக் காட்டுகின்றது.

என்றோவிதைத்தது நாம் அனுபவிக்கும் இன்பம், துன்பம் அனைத்துக்கும் காரணம் "என்றோ விதைத்ததுதான் என நம்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல எம்மில் உள்ளன அது என்னவோ உண்மையும் கூட. அதனையே நிறுபிக்கும் வகையில் எளிமையான இரு பாத்திரங்கள் மூலம் எழுத்தாளர் கதையினை வடித்துள்ளார்.
குத்திரபாசம் எனும் கதையில் கதைக் கருவுடன் இணைந்து பூநகரி அழகின் அடையாளங்களில் ஒன்றாக விலகும் கௌதாரிமுனை கதைக் களமாக அமைந்திருந்தமையானது கதைக்கு மேலும் மெருகூட்டுவதாக அமைந்து காணப்படுகின்றது. அத்துடன் கதைக்கு அப்பால் கதைக்கு மெருகூட்டக் கூடிய வகையில் கதையின் போக்கின் ஏற்றவாறு மக்களின் கலைகலாசார, பண்பாட்டு அம்சங்கள் இணைக்கப்பட்டு கதை நகர்த்திச் செல்லப்பட்டுள்ளமையானது ரசிக்கக்கூடியதாக காணப்படுகின்றது.

'மனவலிமை' எனும் சிறுகதைத் தலைப்பில் ஆசிரியர் பல்வேறு விடயங்களினைச் சுட்டிச் செல்கின்றார். ஊனம் என்பது முன்னேற நினைக்கும் எவருக்கும் தடையல்ல. அதனை குறையாக யாரும் சுட்டிக்காட்டும் போது கவலை கொள்ள வேண்டிய ஒரு விடயமும் இல்லை என்பதனை சரவணன் எனும் பாத்திரத்தின் மூலமாகவும் வெளிக்கொணர்ந்திருக்கும் அதே வேளை ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு மட்டுமல்ல சக ஆசிரியர்களுக்கும் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தினையும் கதை ஆசிரியர் செம்மையாக வெளிக்கொணர்ந்திருக்கின்றார்.

"ஓயாத ஓய்வூதியர்" முதுமை என்பது மரியாதைக்குரியது. பேணப்பட வேண்டியது ஏனெனில் முதுமை நிலையினை அடைவதற்கு முன் பல நிலைகளினைக் கடந்து வந்த அனுபவங்களை, படிப்பினைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டு ஒரு கனதியான பொக்கிசமாக விளங்குவதாகும். இவர்கள் குடும்பத்துடன் சமூகத்துடன் இணைந்து வருங்கால சந்ததியினரை வளப்படுத்த வேண்டியவர்கள் இவர்களுக்கான இடம் முதியோர் இல்லங்கள் அல்ல. அவர்களின் வழிப்படுத்தல்கள் இல்லாத குடும்பங்கள் பல சந்தர்ப்பங்களில் தடுமாறும் சீரழியும் என்பதனை எழுத்தாளர் "ஓயாத ஓய்வூதியர்" எனும் சிறுகதை மூலம் வெளிக்காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்ப சூழ்நிலைகள் பல பெண்களின் வாழ்க்கையினை புரட்டி போட்டு விடுகின்றமை தீனிப்பேய்களில் சுட்டிக் காட்டப் பட்டிருக்கின்றது. ரதிதேவி எனும் பாத்திரமது யுத்தமும் யுத்தத்துக்குப் பின்னரான நிலமைகளும் பல பெண்களை இன்னும் துன்பக் கடலில் சுழல வைத்துக் கொண்டே இருக்கின்றது என்பதனை வெளிக்காட்டுகின்றது.

'கொம்பிப்பசு' எனும் சிறுகதை மனிதர்களைப் போன்றே விலங்குகளும் வார்த்தைகளின்றி உணர்வுகளினை வெளிப்படுத்துகின்ற தருணங்கள் பல. அத்தகைய தருணங்களில் ஒன்றினை நாம் கடந்து வந்த நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி கதையாக உருவாக்கியுள்ளமை சிறப்பம்சமாகும்.

"தாய்க்கு தாயாக வேண்டும்" எனும் கதையில் தாய்மையின் பெருமைகளும் அதன் வலிகளும் சித்தரிக்கப்படுவதுடன் ஒரு பெண் தாயாகும் போது அவளின் தாயின் வெற்றிடம் காணப்படுமாயின் அதனை நிரப்ப எந்த உறவாலும் முடியாது என்னும் உணர்வு நிலை உணர்த்தப்பட்டுள்ளது.

நூல்கள் என்பன அவை வெளியிடப்படும் மற்றும் அதற்கு முன்னைய காலப்பகுதிகளின் கண்ணாடி ஆகும். அந்த வகையில் பூநகர். பொன். தில்லைநாதன் அவர்களின் படைப்பாக்கங்கள் அவை உருவாக்கப்பட்ட காலப்பகுதியினதும் அதற்கு முற்பட்ட காலங்களுக்குரியதுமான சமூக நிலமைகளினை வருங்காலத்துக்கு புடம் போட்டுக் காட்டும் கண்ணாடியாக விளங்கும் என்பது ஐயம் இல்லை.

பல விருதுகளுக்கும் சொந்தக்காரரான கலாபூசணம் பொன். தில்லைநாதன் தான் சார்ந்த சமூகத்தில் எழுத்துக்கள் மூலம் மாற்றத்தித்தினைக் காணத்துடிக்கும் பாங்கு பாராட்டுக்குரியதாகும். இவர் மேன் மேலும் தொடர்ச்சியாக பல ஆக்கங்களைப் படைத்து கலை உலகுக்கு சிறப்புப் பணி ஆற்ற வேண்டும் என்பதே பூநகர் சமூகத்தின் எதிர்பார்ப்பாகும். இதற்கு இறைவன் நல்லாசி வழங்குபவராக.....

யோ.கிரிஜா
உதவிப் பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
பூநகரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

1)	கிளைதவறிய இலைகள்	-	12 - 17
2)	ஊனம் சிறிது தாக்கம் பெரிது	-	18 - 24
3)	கௌரவம்	-	25 - 32
4)	தீனிப் பேய்கள்	-	33 - 39
5)	என்றோ விதைத்தது	-	40 - 44
6)	புத்திரப்பாசம்	-	45 - 53
7)	கொம்பிப்பசு	-	54 - 57
8)	தாய்கு தாயாக வேண்டும்.	-	58 - 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை தவறிய இலைகள்

நடராசா வாத்தியார். அவர் பல தசாப்தங்களுக்கு முன்னதான ஒரு பிரபலமான கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி அவரது அர்ப்பணிப்பான சேவையின் மூலம் அதிபராகப் பதவியுயர்வு பெற்று வன்னிப் பிராந்தியத்தில் உயர் வகுப்புக்களைக் கொண்ட கல்லூரியில் பல வருட காலம் சேவையாற்றியவர்.

அவர் தமது சேவைக்காலத்தில் "கண்டது கற்கப் பண்டிதனாவான்" என்னும் முதுமொழிக்கேற்ப தனது கரிசனை மூலமும் தேடல் மூலமும் பல இந்திய நூல்களைக் கற்றுத் தேர்ந்து பண்டிதர் பரீட்சையிலும் தோற்றி சித்தி பெற்றதோடு எம் மாணவ சமுதாயத்திற்கு கலங்கரை விளக்காக நின்று வழிகாட்டி நின்றமை அவருக்கு அவ்வூரில் பெரு மதிப்பையும் புகழையும் ஏற்படுத்தியிருந்தது. எல்லோரும் அவரைப் பண்டிதர் ஐயா என அன்பாக அழைத்து வந்தனர்.

அவருடைய சேவைக்காலத்தில் அப்பாடசாலையின் கல்வித்தரம் உயர்ந்து வந்தமையும் அப்பாடசாலையிலிருந்து பல பட்டதாரி மாணவர்கள் உருவாவதற்கும் அவரது நிர்வாகத் திறமையும் பன்முகப்பட்ட ஆளுமையும் காரணமாய் அமைந்தமை எல்லோர் வாயிலும் பேசுபொருளாயிற்று.

அகவை அறுபதை அண்மித்திருந்த நடராஜா வாத்தியாருக்கு தன்னுடைய முப்பத்து இரண்டு வருட கல்விச் சேவையை முடிவுறுத்தும் காலம் நெருங்கி விட்டமையை நினைக்கும் போது அவரால் ஜீரணிக்க முடியாமல் "அனலிடைப்பட்ட புழுப்போல்" துடிக்கும் நிலைக்கு உள்ளானார். ஏன்? "ஓடி ஓடி உழைத்து ஒரு புனிதமான சேவையை ஆற்றி அதன் மூலம் பல சமுதாய வழிகாட்டிகளை உருவாக்கிய என்னால் ஓய்வு பெற்ற பின்பு எப்படி ஒட்டாண்டியாய்க் காலத்தைப் போக்க முடியும்" என்பதே அவரது கவலையாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் நடராஜா கௌரவமான ஒரு குடும்பத்தில் மூத்த புதல்வனாய் பிறந்தார். கடவுள் நம்பிக்கை உடைய அவரது பெற்றோர் கடவுளின் மறு பெயரைச் சூட்டி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். பண்டிதர் நடராஜாவிற்கு இரு பிள்ளைகள். ஒரு பெண்ணும் ஒரு ஆணும். இருவரும் சிறியவராக இருக்கும் போதே தமது பெற்ற தாயை இழந்து விட்ட நிலையில் அவர்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து எந்தவிதக் குறைகளும் இல்லாமல் படிக்க வைத்து அவர்கள் இருவருக்கும் ஆசிரியத் தொழிலின் மகத்துவம் பற்றி இடைவிடாது குறிப்பிட்டதன் பிரகாரம் அவர்களுக்கு ஆசிரியத் தொழிலில் ஆர்வம் ஏற்பட்டது. தந்தையின் நீண்ட கால விருப்பப்படி அவர்கள் இருவருக்கும் ஆசிரியத் தொழிலே கிடைத்ததன் பலனாக நல்ல மகிழ்ச்சிகரமான குடும்பமாய் விளங்கியது. இக்குடும்பத்தையே ஏனையோர் பார்த்து ஊர் போற்ற வாழ்ந்து வரும் காலத்தில் இருவரும் திருமண பருவத்தை அடைந்தனர். கௌரவமான இவர்கள் குடும்பத்தோடு திருமண பந்தத்தில் இணைய பலர் முன்வந்த போதும் பண்டிதர் ஐயா எடுத்த முயற்சி பயனற்றுப் போனதால் அவர் தனது பிள்ளைகளின் வாழ்க்கை விடயத்தில் பெரும் கவலை கொண்டிருந்தார்.

அன்று ஒருநாள் அவரது அன்பிற்குரிய மகள் துளசி அவரை அணுகி "என்னோடு கற்பிக்கும் சக ஆசிரியையின் அண்ணாவை நான் விரும்பியிருக்கிறேன். அவரைத் தான் திருமணம் செய்ய முடிவெடுத்து விட்டேன்." என்று சுருதி தந்தையின் சம்மதத்தை வேண்டி நின்றாள். "தொழில் எதுவும் இல்லாது ஊதாரியாக தொழில் தேடுபவராக இருக்கும் ஒருவரை திருமணம் செய்ய முடிவெடுத்து உன் முடிவை எனக்குக் கூற நான் எப்படி இத்திருமணத்திற்குச் சம்மதிக்க முடியும்? ஏற்க முடியுமா?" சுருதி முடித்து சற்று நேரம் அமைதியாக இருந்து சிந்தனையில் ஆழ்ந்தார் பண்டிதர். "அப்பா சிறு வயதிலேயே தாயை இழந்து விட்ட எங்கள் இருவரையும் எந்தவிதக் குறையும் இன்றி படிக்க வைத்து உயர்ந்த நிலைக்கு வரச் செய்தீர்கள். என்றாவது உங்கள் சொல்லைத் தட்டியதுண்டா? இது எனது வாழ்க்கைப் பிரச்சினை. இதில் நான் தான் தீர்மானம் எடுக்க முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் அல்ல. இதில் நீங்கள் தடை போட வேண்டாம்"? இப்படித் தான் மகள் துளசி கூறி முடித்தாள்.

பலருக்கு உபதேசம் செய்து பலரது வாழ்க்கையை உயர வைத்த பண்டிதர் நடராஜாவால் தன் மகளுக்கு செய்யும் உபதேசம் பலனளிக்குமா? என்று கேள்விக் குறியாக நின்றார். சிறு வயது முதல் தாயில்லாப் பிள்ளை என அன்பையே ஊட்டி செல்லம் கொடுத்து வளர்த்து விட்ட மகள் துளசியின் கோரிக்கையை ஏற்க முடியாமலும் புறக்கணிக்க முடியாத நிலையிலும் இருதலைக்கொள்ளி எறும்பானார் பண்டிதர். செல்ல மகள் துளசியின் பிடிவாதக் குணத்தை நன்கு அறிந்தவர் என்ற வகையில் இத்திருமணத்தைத் தடுக்க முற்பட்டால் ஏற்படப் போகும் விபரீதம் பற்றியும் சிந்திக்கலாயினார். உள்ளமும் கண்களும் கலங்கிய நிலையில் :அம்மா... இதற்குப் பதில் கூற எனக்குத் திராணி இல்லை. துளசி! நீ நன்றாகச் சிந்தித்து எனக்கு முடிவைச் சொல்" என்றார். "அப்பா.... சிந்திப்பதற்கு வேண்டிய தேவையே இல்லை. யாரும் எனது திருமணத்தைத் தடுக்க முற்படவும் கூடாது தடுக்கவும் கூடாது" எனக்கூறி முடித்தாள்.

"அடியற்ற மரம் போல்" நிலை தடுமாறினார் பண்டிதர். "அப்பா நான் மட்டுமல்ல எனது அண்ணாவும் கூட எனது நண்பி வாசுகியைத் தான் திருமணம் செய்ய விரும்புகிறார்" என்றாள். ஒரே நேரத்தில் பல சம்மட்டிகளால் தனது தலையில் அடிப்பது போன்ற உணர்வு பண்டிதருக்கு ஏற்பட்டது. "நீங்கள் இருவருமே சேர்ந்து நாடகமாடி முடிவெடுத்து விட்டால் எனக்கு இங்கு என்ன வேலையுள்ளது? என்ன உரிமையுள்ளது? தகவலைத் தானே சொல்ல விரும்புகிறீர்கள்? அதுவும் எனக்குத் தேவையில்லை உங்கள் விருப்பப்படி முடிவெடுத்து விட்டீர்கள் என்றால் எனக்கு என்ன வேலை. இன்னும் ஆறு மாதங்களில் நானும் ஓய்வு பெறப்போகிறேன். எனது சொல்லை இனியும் கேட்க வேண்டுமா? வயது போய்விட்டாலே முதுமையும் வந்துவிடும். எல்லோருக்கும் வருவது தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு மட்டும் விதிவிலக்கா....? என்று அலுத்துக் கொண்டார்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அண்ணனும் தங்கையும் தனது வாழ்க்கைப் பிரச்சினை பற்றி அளவளாவிக் கொண்டிருந்தனர். "அண்ணா நான் எனது காதல் விடயத்தை அப்பாவிடம் கூறும் போதே உங்கள் விடயத்தையும் அவரது காதில் போட்டு விட்டேன்." என்றாள் துளசி. உடனே ஆர்வத்தோடு "அப்பா என்ன சொன்னார். அவர் பொங்கி எழுந்து கொதித்து வெடித்திருப்பாரே" என்ற தமையனுக்கு "அப்படி பெரிசா ஒன்று நடக்கவில்லை. ஆனால் அவருக்கு மனம் சரியில்லை. வேலையில்லாமல் வெட்டியாக இருக்கும் ஒருவனை திருமணம் செய்யத் தனக்கு விருப்பமில்லை. உங்கள் விருப்பத்திற்குச் செய்வதென்றால் எனக்கு என்ன வேலை என்று கூறி முறித்துக் கொண்டார்" என்றாள். "அவ்வளவு தானே அவர் தன்ர காலமெண்டு நினைக்கிறார். இப்போதைய உலகத்தைப் பற்றி புரிந்து கொள்ள முடியாமலுள்ளார். அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்" இப்படித் தான் துளசிக்கு அண்ணன் சரவணன் கூறினான். இதன்படி இருவரும் சேர்ந்தே தமது வாழ்க்கை விடயத்தில் செயற்பட்டனர்.

அதிபர் பண்டிதர் நடராஜாவிற்கு அறுபதாவது பிறந்தநாள் விழாவை பாடசாலை சமூகம் மணி விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்ததுடன் தங்கப்பதக்கம் அணிவித்து பொன்னாடை போர்த்தி மதிப்பளித்தார்கள். அதன் பின்னர் தான் உத்தியோகம் புருச லட்சணம் என்பதை அறிந்து கொண்டார். தனக்குச் சமூகத்தில் இருந்து வந்த மதிப்பும் மரியாதையும் குறைந்து போவதை அவரால் உணர முடிந்தது. பிள்ளைகள் இருவரும் தமது விருப்பத்திற்கு மாறாகவே தமது திருமண விடயத்தில் செயற்படுவதும் தனது சொல்லுக்கு மதிப்பில்லாமல் போவதும் அவருக்கு மிகுந்த வேதனையைத் தந்தாலும் தனது வெறுப்பைக் காட்டாது நாட்களைக் கழிப்பதே உசிதம் என மௌனம் காத்து வந்தார்.

அன்று ஒருநாள் பிள்ளைகள் இருவரும் தந்தையை அணுகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களின் இருவரது திருமணத்தையும் ஒரே நாளில் ஒரே முஹூர்த்தத்தில் ஒரே மேடையில் நடத்துவதற்கு நாள் பார்த்துத் தரும்படி விநயமாக வேண்டி நின்றனர். மன நிறைவோடு செய்ய வேண்டிய இத்திருமணத்தை வேண்டாவெறுப்போடு இசைவைக் கொடுத்து "திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். அது சொர்க்கத்தில் நிர்ணயிக்கப்படுவது. அது பெரியோரின் ஆசியுடன் நடைபெற வேண்டியது. நீங்களே உங்கள் விதியை நிர்ணயித்துக் கொண்டீர்கள். இதில் நான் ஒன்றும் செய்வதற்கில்லை. இனி விதிப்படி எல்லாம் நடக்கட்டும்" எனக் கூறி முடித்தார்.

நல்லதோர் முஹூர்த்த நாளில் அவ்வூர் அம்மன் கோயில் மண்டபத்தில் திட்டமிட்டபடி ஆடம்பரமாக இருவருக்கும் திருமணம் நடந்து முடிந்தது. காலம் உருண்டோடிக் கொண்டிருந்தது. சரவணனும் மனைவியும் பிறந்த வீட்டில் இருப்பதை விட்டு தனியாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து தனித்து வாழ்க்கையை ஆரம்பித்தனர். வாரத்திற்கு ஒரு தடவை வந்து தனது தந்தையை பார்த்து சுகம் விசாரித்துச் செல்வது வழக்கமாயிற்று. துளசியும் கணவரும் பிறந்த வீட்டில் தந்தையோடு இருந்த போதும் அங்கு நிம்மதியான சூழல் இல்லாததைப் பற்றி உணர்ந்து மனமுடைந்து உடலும் இளைத்த நிலைக்கு வந்தார். பண்டிதர் குடி மற்றும் போதைவஸ்துக்கும் அடிமையான துளசியின் கணவர் வசீகரனுக்கு துளசியின் மாதச் சம்பளமே போதாத நிலையில் பண்டிதர் நடராஜாவின் ஓய்வூதியப் பணமும் வங்கியிருப்பும் கரைந்து கொண்டிருக்கும் போது தான் தன்னைப் பற்றி சிந்திக்கலாயினார். பண்டிதர் நடராஜாவின் பெயரில் இருந்த வீடு, வயல் காணிகளைக் கூடத் தந்திரமாக தங்களது பெயரில் உறுதி எழுதிப்பெற்றுக் கொண்டமையை உணர்ந்து தான் செய்துவிட்ட தவறை எண்ணி வருந்தினார்.

அன்றும் ஒருநாள் குடிபோதையில் வந்த வசீகரன் மனைவியோடு தர்க்கப்பட்டதோடு மாமனார் பக்கம் பேச்சுத் திரும்பியது. மாமனார் அமைதியாகத்தான் கதைத்த போதும் வசீகரன் சிறிதும் மதிப்பளிக்காத நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு காணப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட துளசியை நோக்கி "போடி போ நீ வரேக்க என்ன சீதனம் கொண்டு வந்தனீ" உன்ர அப்பன் என்ன சீதனம் தந்தவர். வெறும் பொம்பிளை எடுத்த நான் கதைக்கிறத கேட்கத்தான் வேண்டும்" என்றான்.

நிலைமையை அறிந்து கொண்ட பண்டிதர் நடராஜா நன்கு சிந்தித்தார். பெருங்கவலை கொண்டவராக பெரு விருட்சமாக பச்சைப் பசேல் என்று அழகாகக் காட்சியளித்த கிளையில் இருந்து உதிர்ந்து போன இலையாக தேடுவாரற்ற நிலையில் தான் வந்து விட்டதை உணர்ந்து கொண்டார். வெட்கமும் வேதனையும் அடைந்தவராய் கையில் அகப்பட்ட ஒரு பொதியைத் தூக்கிக் கொண்டு "கூனிக்குறுகி" வெளியேறிக்கொண்டிருந்தார். யாரும் தன்னை அழைப்பார்கள் என எதிர்பார்த்தார். அதுவும் நடைபெறவில்லை. கணவன் கட்டுப்பாட்டுக்குள்

கட்டுண்டு போன துளசியாலும் தன் தந்தையை அழைக்க முடியவில்லை. அவளும் வாய் மூடி மௌனியாளான். கைதடியிலுள்ள வயோதிபசாலைக் கதவுகள் அவருக்காக திறந்த வண்ணமேயிருந்தது. கிளையில் இருந்து உதிர்ந்து போன சருகிற்கு சமமாக வயோதிப சாலை வளாகத்தினுள் நுழைந்தார் பண்டிதர் நடராஜா.

பொன். தில்லைநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனம் சிறிது தாக்கம் பெரிது

நொண்டி சேர்...அவர்..நல்ல சேர்.. நல்லாய் விளங்கப்படுத்திப் படிப்பிப்பார். பாவம் ஊன்றுகோ லோடை அவர் வகுப்புக்குள்ளே வரேக்கை பாக்கப் பாவமாய் இருக்கும். ஏன் தான் இப்பிடி நொண்டியாய்ப் பிறந்து கஸ்ரப்படுகிறாரோ...? நல்லவருக்கு கடவுள் விட்ட வழி இதுதானோ..? "இப்படித்தான் அந்தக் கல்லூரியில் கல்வி கற்கும் சிறிய மாணவர்களும் ஏன்? பெரிய மாணவர்களும் பேசிக் கொள்வது சாதாரண விடயமாய்ப் போய் விட்டது.

அந்தப் பிரதேசத்தில் அது ஒரு பெரிய கல்லூரி அக் கல்லூரியில் கணிதப்பாடத்தை போதிக்கும் கணிதபாட ஆசிரியராக நியமனம் கிடைத்து ஒருவருடம் கடந்த நிலையிலும் கோகுலன் என்ற அவனது அழகான பெயரை உச்சரிப்பவர்களில் மாணவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் நொண்டி சேர் என்று அழைப்பதை பலரும் கண்டும் காணாமல் இருந்தமை அவனுக்கு மன வேதனையைக் கொடுத்தாலும் கோகுலன் கேட்டும் கேளாதவனாகவும், கண்டும் காணாமல் இருப்பதைப் பற்றி யாவரும் அலட்டிக் கொள்ளவில்லை. தன்னுடைய ஊனத்துக்கான உண்மையான நிலையை... எப்படி இந்நிலை ஏற்பட்டதென்பதை அறியாவர்கள் அறிய முடியாதவர்கள் தானே. இவர்கள் என்னைப்பற்றி.... எனது சேவை பற்றி நன்றாய்த் தானே பேசிக்கொள்கிறார்கள். " எப்படி அழைத்தால் தான் என்ன.... எனக்கென்ன பேச்சு.. " இப்படித்தான் அக் கல்லூரிக்கு புதிதாய் நியமனம் பெற்று வந்த ஆங்கில பாட ஆசிரியரோடு விவாதிக்கும் போது கோகுலன் கூறினான்.

கோகுலனின் இப் பேச்சு கணேசனுக்கு பெருங் கோபத்தை உண்டாக்கியது. கோகுலனிலும் பார்க்க இரு வயது மூத்தவனான கணேசன் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு சிற்றூரைச் சேர்ந்தவன் அவனது தாயும் தந்தையும் ஆசிரிய சேவையாற்றிய பண்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் படிக்கும் காலத்தில் தான் கற்ற கல்லூரியில் சாரணனாக, சாரணகுழுத் தலைவனாக இருந்து மாணவர்களை வழி நடாத்தியவன். அவன் சற்று நிதானமாகச் சிந்தித்து உணர்ச்சி வசப்பட்டு பேசத் தொடங்கினான். கோகுலன் நீ மடையன் மாதிரி பேசாதே..... உனக்கொரு அழகான பெயருண்டு அதுமட்டுமல்ல நீ முக்கியமான ஒரு பாடத்தைப் போதிக்கும் கணித பாட ஆசிரியர்களில் ஒருவன் இது இரண்டும் போதாதா? என்னடா ஊனத்தை முன்னிறுத்தி " நொண்டி சேர்" என்ன பட்டமா சூட்டுகிறார்கள்? இதைத் தடுக்க இக் கல்லூரியில் ஒருவருக்கும் அக்கறை இல்லையா? இவ்விடயம் பற்றி ஏனைய ஆசிரியர்கள் விருப்பத்தை அவதானித்து ஏன் மனம் பொங்குவதில்லை கோகுலன் இதுக்கு ஒரு முற்றுப்புள்ளிவைத்தேயாக வேண்டும். " பொரிந்து தள்ளினான்.. கணேஸ் அமைதியுடன் கணேஸ். உரைப்பதைக் கேட்ட கோகுலன்

"கோபப்படாதே கணேஸ் ... உன்ரை பேச்சு ஒரு பக்கத்துக்கு நியாயமாய்ப்பட்டாலும் இதுக்கு என்ன போராட்டம் நடத்தப்போறாய்"?

இந்தக்கல்லூரியில் இருந்து போக வேண்டிய நிலை வந்தாலும் என்ர மனதை அழுத்தும் இந்த நிலையை அறவே மாற்றிக் காட்டுகிறேன். ஒண்டில் கோகுலன் சேர் என்று சொல்லுவாங்க.... இல்லை கணித சேர் என்று சொல்லுவாங்க... ஆரம்ப பிரிவு மாணவரிலை இருந்து வளர்ந்த மாணவர் நாவிலை இந்தப் பட்டப்பெயரை...வார்த்தையை உச்சரிக்காமல் செய்து காட்டிறன்.

இப்படித்தான் உறுதிபடத் தெரித்தான் ஸ்ரீ என்று எல்லோராலும் அன்பால் அழைக்கப்படும் ஸ்ரீகணேஸ் அவன் தன்னலம் அற்ற பிறர்நலம் பேணும் சிறப்பான குணமுடையவன். தனது பாடசாலையில் மாணவர் நலன் கருதி ஆங்கில பாட மாணவர் மன்றம் அமைத்து அதனூடாக அப் பாடசாலை மாணவர்கள் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகளை நிலைநாட்டியவன். அதனால் மாணவர்களும் ஏன் ஆசிரியர்களும் மிகுந்த மதிப்பு கொடுத்து வந்தார்கள். கல்லூரியில் மட்டுமல்ல அப்பாடசாலைச் சமூகத்திலும் தன் சிறப்பான சேவை மூலம் மக்கள் மனதில் நீங்காத இடம்பிடித்துக் கொண்டவன்.

கோகுலன்.அவன் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். இயற்கை வனப்புக் கொண்ட கௌதாரி முனை என்கிற குக்கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவன். பனை வளமும் தென்னை வளமும் சுற்றுச் சூழவும் கடல் வளமும் கொண்ட பசுமையான கிராமம் வெள்ளை நிறம் கொண்ட மணற்கும்பிகள் வானைத்தொடுவன போல் உயர்ந்து நிற்கும் இயற்கை அழகு பார்ப்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் வனப்பே அக்கிராமத்தை நோக்கி சுற்றுலாப் பயணிகள் திரளும் இடம். அங்கே தான் கோகுலன் பிறந்தான். கிராமப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்தபின் அவனுக்கு ஆரம்ப கல்வியை ஊட்டிய ஆசிரியர் அவனது திறமையைக் கண்டு அவனுக்கு மேற்படிப்பிற்கான உதவிகளைப் புரிந்து யாழ் நகரப்பாடசாலை ஒன்றில் விடுதி மாணவனாகச் சேர்த்து உயர் வகுப்பில் கணித பாடப்பிரிவு மாணவனாக கற்றுக்கொண்ட காலப்பகுதியில் விடுமுறைக் காலத்தில் வீடு வந்தவன். மீண்டும் அவன் உயர் கல்வியைப் பெறமுடியாத அவலநிலை ஏற்பட்டது.

வடபகுதியில் விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலம் அது நாட்டைக்காக்க வீட்டுக்கொரு போராளி இணைந்தேயாக வேண்டும் வீடுக்கொரே ஆண்மகன் கோகுலன். அவனால் தப்பித்தோ மறைந்தோ வாழ முடியவில்லை.

குக்கிராமத்தில் பிறந்த அவன் கணிதபாட பட்டதாரியாக வந்து நாட்டுக்கு சேவை செய்ய வேண்டியவன் தன் கல்வியை மறந்தான்... தன் குடும்பத்தை மறந்தான். தளபதிக்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனுக்கு விசுவாசமான போராளியாக மாறினான்.

விடுதலைப் போராளிகள் அணியில் மூத்த தலைவனாகி களம் பல கண்டவன். தவளைத் தாக்குதலில்... முல்லைச்சமரில் ... சாதனை வீரனாகத் திகழ்ந்தவன்.. தலைவரினால் பாராட்டும் பரிசும் பெற்றவன். ஆனால் அவனின் நிலை பரிதாபத்திற்குரியதாய் மாறியது. களம்பல கண்ட வீரன் விடுதலை பெற்று வெளியே வரத் தயங்கி நின்றான். ஆனால் பல வருடம் போராளியாய் இருந்து சாதனை புரிந்த கோகுலனுக்கு தலைவரின் கட்டளை ஊனமுற்ற போராளியாக சமூகத்தோடு இணைக்கப்பட்டான்.

தன் எதிர்காலம் பற்றி நீளமாக சிந்தித்தான் கோகுலன்... எனக்கு .. என்ன... மதிப்புக் கிடைக்கப்போகிறது நான்.... முடமாகிப் போனவன் இனியும் வாழ்வதில் பயனுண்டா நான் மற்றையோருக்கு பாரமாய் இருக்கலாமா? இப்படியே கேள்வி மேல் தன்னையே கேள்வி கேட்டுக் கொண்டே வாழ்ந்தவன் தனது ஓய்வு நேரத்தை கிராமத்தில் உள்ள நூலகத்திலே செலவிட்டதோடு அப்பகுதி சிறார்களுக்கு தலைவன் காட்டிய பாதையில் நின்று கணிதபாட வகுப்பை இலவசமாக நடாத்திக்கொண்டிருந்தான்.

நம்பிக்கை ஒளி அவன் உள்ளத்தில் உதயமாவதை ஊனமுற்ற கோகுலனால் உணர முடிந்தது. கோகுலனைத் நண்பன் ஒருவர் அன்று ஒருநாள் தேடி வந்து ஒரு விண்ணப்பப்பத்திரத்தைக் கொடுத்து வலுக்கட்டாயமாக விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து கையொப்பம் வாங்கிச் சென்றார்.

சிலவாரங்களில் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு வந்தது. ஊனமடைந்த ஒரு போராளி... எனக்கு .. நேர்முகப் பரீட்சை .. நம்பிக்கை இழந்த நிலையிலும் நேர்முகத் தேர்வில் பங்குகொண்டு திரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய கடந்தகால வாழ்க்கை... பேராளியாக களம் பலவற்றில் புரிந்த சாதனை, தலைவனின் பாராட்டு அத்தனையும் அவன் மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்தது. வீட்டுவாசலில் கேட்ட ஊதுகுழல் சத்தம் அவனது மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்த. கடந்தகால சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. மெல்ல மெல்ல தனது மூன்று சில்லுச் சைக்கிளை நகர்த்தினான். தபால்காரனிடமிருந்து அரசபணிக் கடிதத்தை பெற்றுக்கொண்டே கோகுலன் ஆவலோடு பிரித்தால் அவனால் நம்பவே முடியவில்லை. கணித ஆசிரியர் நியமனத்துக்கான கடிதம் தான் ஒரு போராளியாக இருந்த போதும் தன்னை நன்கு பண்பட்ட உள்ளத்தினனாய் தன்னை வளர்த்து விடுதலை பெற்றுத்தந்த அன்போடு நேசிக்கும் தலைவனை நினைத்துக் கொண்டான்.

கோகுலன் புதிய நியமனத்துக்கான தனது பாடசாலையில் பொறுப்பேற்று மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் கடமை செய்து வந்த நிலையில் புதிய ஆசிரிய நண்பன் ஸ்ரீ கணேசனின் பட்டப்பெயருக்கான எதிர்மறைப் போராட்டம் பெருந்தலையிடியை ஏற்படுத்தியது. என்ன நடக்குமோ? ஏது நடக்குமோ? இப்பிரச்சினையால் தனக்கு இடமாற்றம் வந்துவிடுமோ? என்று ஏங்கித் தவித்தான். கோகுலனுக்கு பெரும் மனப்போராட்டம்...

அன்று சனிக்கிழமை நாள். ஸ்ரீ வீட்டிற்குச் சென்று தனது விடயம் சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாமெனக் கெஞ்சிக் கேட்பதாக முடிவு செய்து கொண்டான். அன்று மாலை அந்திநேரம். பகலவன் தன்பகல் யாத்திரையை முடித்துக் கொண்டு விடைபெறத் தயாரானான் பொன்னிறக் கதிர்களின் குளிர்ந்த வெயில் அவன் உடலில் பட்டு குளிர்மை அடையும் நேரம் தன் ஊன்று கோலை எடுத்தான். முச்சில்லுச் சைக்கிளில் ஏறிக்கொண்டான். விரைவாக கைப்பெடலை சுற்றுகிறான். உள்ளத்தின் வேகம் ஒருபுறம் சைக்கிளின் வேகம் மறுபுறம். பொழுது கருகும் நேரம் தன்வீட்டிற்கு வந்து சேர்ந்த கோகுலனைக் கண்டு அதிர்ச்சியடைந்தான். "ஏனடா ஒரு சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியிருந்தால் நானே உன்னைத் தேடி வந்திருப்பேனே நீ.. இப்பிடி வந்து எனக்கு பாவத்தை தேடுகிறாய்".

கணேஸ் உன்னோடு ஒரு முக்கியமான விடயத்தை கதைத்து முடித்துவிடவேண்டும். அதுதான் வந்தேன் குறைவிளங்காதே... கோபப்படாதே " நேற்றையதினம் என்னோடு பேசிக்கொண்ட விடயம் அதை மறந்துவிடு எந்த நடவடிக்கையும் வேண்டாம்" கெஞ்சிக்கேட்டான் கோகுலன்.

ஸ்ரீகணேஸ் உறுதிபட இப்படித்தான் கூறினான். "கோகுலன் நீ என்னுடைய சிறந்த நண்பன். அதுமட்டுமல்ல எம் இனத்தின் இனியவாழ்விற்காக போராடி ஊனமானவன். அந்த தியாகத்தை உணராமல், தெரிந்தோ... தெரியாமலோ நொண்டி சேர் என உச்சரிப்பதை போக்கிக் கொள்வதை மனிதநேயம் கொண்ட ஒருவனால் ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்கு வரும் திங்கள் அன்று தொடக்கம் ஒரு மாற்றம் ஏற்படுத்தியே தீருவேன். முடியா விட்டால் நான் இப் பாடசாலையில் இருப்பதில் ஒரு அர்த்தமும் இல்லை. என்னை மன்னித்து விடு நாளை பாடசாலையில் நடப்பதைப் பார் நீ... போயிற்றுவா" கோகுலன் பெரும் துக்கத்தோடு புறப்பட்டான்.

இரவு முழுவதும் சிந்தனையில் ஆழ்ந்த ஸ்ரீ கணேஸ் மறுநாள் காலை நேரத்தோடு பாடசாலை வந்து சேர்ந்ததோடு அதிபர் அலுவலகம் போய் தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தினான். அவன் கூறிய விடயங்களை அவதானத்துடன் கேட்டதுடன் அன்றைய காலை நற்சிந்தனையில் அவனுக்கு -பத்து நிமிடம் வழங்கப்பட்டது.

பொருள் பொதிந்த அவனது வார்த்தைகளைக் கேட்டு மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் தாம் தெரியாமல் செய்து கொண்டிருக்கும் தவறை உணர்ந்து உள்ளம் உருகினார்கள். பாடசாலை வளாகம் எங்கும் கோகுலனை தேடினார்கள். அவனை காணமுடியவில்லை. பாடசாலையில் என்ன விபரீதம் நடக்குமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சிந்தித்த கோகுலனை அன்றைய தினம் லீவு பெற விண்ணப்பித்துள்ளதாக அறிந்திருந்தார்கள். அன்றைய தினம் பாடசாலை விட்டதும் பல மாணவர்களும், ஏன் ஆசிரியர்களும் அவனைச் சந்தித்து தமது வருத்தத்தை தெரிவிக்க வந்து போய்க்கொண்டிருந்தமை தனது தன்னலமற்ற தியாகத்திற்கு கிடைத்த மதிப்பாக உணர்ந்து கொண்டு என்னைப் போன்ற ஊனமுற்ற போராளிகள் அனைவரும் சமூகத்தால் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் தியாகமும் சமூகத்தால் உணரப்படவேண்டும். போற்றிப் புகழ்ப்பட வேண்டும் என்பதையும் தன் நண்பர்களிடம் தெரியப்படுத்தத் தவறவில்லை.

கடந்து போய்விட்ட சம்பவங்களுக்காக மன்னிப்புக்கோர அணி அணியாக மாணவர் குழுக்கள் வந்து கொண்டிருந்தார்கள். மறுநாள் பாடசாலை போனதும் வித்தியாசமான உணர்வைப் பெற்றான் கோகுலன். கோகுலன் சேர் கோகுலன் சேர் என மாணவர்களின் அழைப்பு அவனுக்கு புது உணர்வை ஊட்டியது. ஸ்ரீகணேஸ் போன்ற உன்னத நோக்கமும் இலட்சியப் பற்றும் கொண்ட நண்பனை வாழ்நாளில் மறக்க முடியுமா?

அன்று மாலை பாடசாலை வளாகத்தில் எதிர்பாராத சம்பவம் ஒன்று இடம்பெற்றது. அவனது பாடசாலை அதிபரின் முன் ஏற்பாட்டின்படி வெள்ளை கயஸ் வாகனம் ஒன்று வந்து நின்றது. ஜெய்ப்பூர் நிறுவன பணிப்பாளர் செயற்கைக் காலுடன் வந்திறங்கினார். பாடசாலைச் சமூகம் மகிழ்ச்சிக்கடலில் மிதந்தது.

" தியாகம் என்றும் வீண்போவதில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவம்

கலாபூஷணம் பொன்.தில்லைநாதன்
ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்.
பூநகரி.

சின்னத்தம்பி விதானையார் என்றால் அவ்வூரில் தெரியாதவர்களே இல்லை என்கிற அளவுக்கு பிரபலமானவர். எல்லோரும் அவரை சின்ன விதானையார் என்று செல்லமாக அழைப்பதுண்டு. அவ்வூரில் நீண்டகாலம் விதானையாராய் (கிராமசேவகர்) இருந்து அரச சேவையில் ஓய்வு பெற்று ஒரு ஓய்வூதியராக வாழ்ந்து வந்தார்.

சின்னத்தம்பி விதானையாருக்கு ஒருமகனும் ஒரு மகளும் இருந்தார்கள். சிறுவயதாய் இருக்கும்போதே விதிவசத்தால் பெற்றதாயை இழந்துவிட்ட நிலையில் அவர் தனது சகோதரியின் உதவியோடு அவர்களை வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கி நல்ல நிலைபெற உதவியவராவார். மூத்தவர் சுரேஸ் இணையவள் வாசுகி. கல்வியில் தேர்வு பெற்று வேலை தேடிக்கொண்டிருந்தார்கள். ஆசிரியப்பதவிக்கு விண்ணப்பித்திருந்த நிலையில் இருவருக்கும் ஒரே நாளிலே ஆசிரியர் நியமனம் கிடைத்தது.

அண்ணன் சுரேஸ் மலை நாட்டில் உள்ள பாடசாலை ஒன்றிலும், வாசுகி உள்ளூரில் உள்ள கிராமப்புறப் பாடசாலை ஒன்றிலும் கடமையை ஏற்றுக் கொண்டனர். வாசுகி தன் கடமையை எவரும் குறை சொல்வதற்கு இடம் வையாமல் திருப்திகரமாகச் செய்து வந்தாள். அறிவும், அழகும் அவளின் கூடப் பிறந்த சொந்தங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வயதை எட்டி நிற்கும் வாசுகிக்கு பலர் வரன் கொடுக்க முண்டியடித்தார்கள். ஆனால் அவள் கற்பித்த பாடசாலையிலேயே கடமை புரியும் சரவணன் என்ற ஆசிரியர் அவள்மீது மையல் கொண்டு திருமணம் செய்ய முன்வந்தபோது வாசுகியின் தந்தையும் மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் தனது இசைவைத் தெரிவித்திருந்தார். நல்லதோர் முகூர்த்தத்தில் சுற்றம் சூழ வெகு சிறப்பாக திருமணம் நடந்தேறி நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

விதானையாரும் மகள், மருமகனுடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து கொண்டிருந்தார்.

நாளடைவில் சரவணனுக்கும் வாசுகிக்கும் இரு குழந்தைகள் உதயமானார்கள். மூத்தவன் சுரேன் இளையவள் மஞ்சுளா ஓய்வுதியரான விதானையார் இரு பேரப்பிள்ளைகள் மீதும் அளவற்ற அன்பு செலுத்தி வந்ததோடு அவர்கள் கல்வியிலும் முன்னேற்றத்திலும் அதீத நாட்டங் கொண்டவராக இருந்தமையினால் பேரப் பிள்ளைகள் மீது சிறிய கண்டிப்பையும் செலுத்த வேண்டியிருந்தது.

ஆசிரியர்களாகக் கடமையாற்றிய இருவரின் வேலைப்பழுவும் வீட்டுப்பொறுப்புகளும் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டாமல் இருந்தமையால் தன் பேரப்பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்து கவலை கொண்டார். அளவுக்கு மீறிய சுதந்திரம் கொடுத்து எந்நேரமும் "ரீ.வி" தான் தஞ்சமென பொழுதைக் கழிக்கும் தம் பேரப்பிள்ளைகள் மீது சற்று கண்டிப்பைச் செலுத்தி வந்தமையால் அவர்கள் தம்முடைய நன்மைக்காக சொல்கிறார் என்பதை மறந்து அம்மப்பா மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினத்தை வெளிப்படுத்தி நின்றமை பற்றி மிகுந்த வேதனைப்பட்டார்.

அன்றொருநாள் நல்ல ஒரு விடயத்தையாட்டி புத்திமதி சொல்ல முற்பட்ட போது சுரேன் கோபப்பட்டவனாக.... "அம்மப்பா நாங்கள் குழந்தைகளல்ல நெடுக எங்களுக்கு ஓதிக்கொண்டிராதையுங்கோ... உங்கட வேலையை நீங்கள் பார்த்துக் கொண்டிருங்கோ எங்கட வேலையிலை நீங்கள் தலையிட வேண்டாம்" இப்படிக் கூறியதைக் கேட்டு விதானையார் அதிர்ச்சி அடைந்தார். பேசாமடந்தையாய் ஆனார். பெட்டிப் பாம்பாக அடங்கிக் கொண்டார். ஏன்? தன் மருமகன் சரவணன் குணத்தை நன்கு அறிந்த காரணத்தால் அவர் மேற்கொண்டு பேசி இருந்தால் வாலிப வயதை எட்டிநிற்கும் சுரேன் பொறுமை காக்க மாட்டான் என்பதை நன்கு அறிந்திருந்தும் ஊரெல்லாம் கட்டியாண்ட விதானையாரல்லவா? பொறுமை இழந்தவராய் " நீ என்னடா கதைக்கிறாய்? உன்னிலை ஒரு பிழையும் சொல்லமாட்டன். உன் அப்பர் தந்த இடம் தான் உன்னை கதைக்க வைக்குது. நல்லாய் கதையடா நானும் கேட்க வேண்டுமென்று விதிபோல் இருக்குது." " கிழடு நீ இங்கை இருக்கிறதெண்டால் பேசாமல் இருந்து அம்மா நேரா நேரத்துக்கு தாறதை திண்டிட்டுக்கிட எங்களோட வீண் கதை வேண்டாம்" " என்ன பிரச்சனை இருவருக்கும் வாக்குவாதம்" கேட்டுக்கொண்டே சரவணன் உள்ளே வந்தான். "தம்பி உன்ரை மோன் என்னை கிழடு எண்டு பேசி உன்ரை வேலையை நீ பார் எண்டு மதிப்பு மரியாதை இல்லாமல் கதைக்கத் தொடங்கியிட்டான் நீங்கள்தான் தம்பி இதுக்கு பதில் சொல்லவேணும்" "நான் என்ன பதில் சொல்லக் கிடக்கு நீங்கள் இஞ்சை சரியாய் நடந்தால் அவனும் சரியாய் நடப்பான் இதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக் கொண்டால் சரி, வயது வந்த பிள்ளைகளோட அளந்து கதைச்சியளெண்டால் எல்லாம் சரியாய் இருக்கும். எந்த நேரமும் ரீ.வி பாக்கிறியள் எண்டு வசை பாடதையுங்கோ..எந்த வீட்டுப்பிள்ளையாள் ரீவி பார்க்கமல் இருக்குதுகள் சொல்லுங்கோ பாப்பம். வரவேணுமெண்ட அவாவில் தான் சொன்னனான். குற்றமிருந்தால் என்னை மன்னிச்சுக்கொள் தம்பி" அந்த நேரம் உள்ளே வந்த வாசுகி இருவரையும் சாந்தப்படுத்தினாள். அமைதி நிலவியது. இருவரும் தங்கள் வேலையில் ஈடுபட்டனர். விதானையார் மனநிம்மதி குழம்பிய நிலையில் இது என் தலைவிதி என நொந்து கொண்டார். ஒரு புராணப் புத்தகத்தை எடுத்து அதிலே தம் புலனைச் செலுத்தினார்.

சின்னத்தம்பி விதானையார் எழுபது வயதைத் தாண்டிய நிலையிலும் கூட, உடல் உறுதியுடனும் மன உறுதியுடனும், தன் கடமைகளைச் செய்து வந்தார். அதிகாலை எழுந்து தன் காலைக்கடமைகளை முடித்த பின் பூசை அறையில் பக்தி மயமாக தினமும் கீர்த்தனைகளை பாடுவதில் ஈடுபடுவார். பின்னர் தன் ஓய்வு நேரத்தில் அக்கறையோடு செய்துவரும் வீட்டுத்தோட்டத்தில் நாட்டப்பட்டு பயன்தரத் தயாராகியுள்ள செடிவகைகளுக்கு நீர் ஊற்றி அவ்வேலைகளைச் செய்வதில் பெருவிருப்பம் கொண்டவராய் இருந்தார். வீட்டுத்தோட்டத்தில் இருந்து கிடைக்கும் காய்கறிவகைகளில் தம் வீட்டுத் தேவைக்கு மிஞ்சியவற்றை சந்தைக்கு கொண்டுசென்று விற்பனை செய்து அதன் வருமானத்தை ஆலயங்களுக்கு கொடுப்பதிலும் ஏழைகளுக்கு வழங்கியும் மகிழ்வார். அயலவர்கள் இவர்மீது அன்பும் அபிமானமும் உள்ளவர்களாக இருந்தார்கள்.

விதானையாரின் பேரப்பிள்ளைகளான சுரேன் உயர்தர வகுப்பிலும் மஞ்சுளா சாதாரண தர வகுப்பிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துக் கொண்டிருந்த காலம் நாட்கள் நகர்ந்து பரீட்சைக்காலம் அண்மித்து விட்டது. பரீட்சை நேரசூசியும் வந்து விட்டதாக பேரப்பிள்ளைகள் பேச்சில் இருந்து அறிந்து கொண்டார். அன்றைய தினம் வார இறுதி நாளாகும்.

பரீட்சைக்காக தம்மைத்தயார் செய்ய வேண்டிய சுரேனும் மஞ்சுளாவும் எந்தவித சலனமும் இல்லாமல் அடுத்தடுத்து வந்துகொண்டிருக்கும் தொடர் நாடகங்களைப் பார்த்து விமர்சனம் செய்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வைப் பார்த்துக் கொண்டிருந்த விதானையாரின் பொறுமை எல்லை மீறியது. தன் மனதுக்குள் சிந்திக்கலாயினர். இந்தப் பிள்ளையள் எப்படி முன்னேற்றமாய் வரப்போகுதுகள். எந்தக்கட்டுப்பாடும் இல்லாமல் வளர்த்து ஊர் சிரிக்க வைக்கவும் என்ரை பேரப்பிள்ளையள் எண்ட அவமானமும் எனக்கும் வரும்தானே வருவது வரட்டும். இதுக்கு ஒரு முடிவு காணத்தான் வேண்டும். பேசத் தொடங்கினார். " நீங்கள் இருவரும் படிக்கிற பிள்ளையள் மாதிரிக் காணேல்லை நாளைக்கு பரீட்சையில் வினாக்கள் ரீ.வி. நாடகத்தைப் பற்றித்தான்.....?

சுரேனோ கோபத்தோடு முறைத்துப் பார்த்தவண்ணம் போய் ரீ.வி யின் சத்தத்தை கூட்டிவிட்டான்.

பொறுமை இழந்த தாத்தா கோபத்தோடு கையை ஓங்கியபடி அவன் அருகே சென்றார். கணப்பொழுதில் நிலைமை மாறியது... "சனியனே எங்கட வீடயத்திலை தலைபோடாதை எண்டு சொன்னால் கேட்கமாட்டாயோ.. படாரென தள்ளிவிட்டான். நிலை தடுமாறி நிலத்தில் விழவும் இதை அவதானித்த வாசுகி " என்னடா வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தாய்" என மளார் ...மளார் என சுரேன் கன்னத்தில் அறைந்தாள். வீடு போர்க்களமாய் மாறியது. இந்த நேரம் அங்கு வந்த சரவணன் தன் மகன் கன்னத்தில் பதித்த கைவிரல் அடையாளத்தை பார்த்ததும் ஒரு விசாரணையும் இல்லாமல் வாசுகியை தாக்கவும் நிலைமை மோசமடைய மஞ்சுளா ஒப்பாரி வைத்து ஓலமிட்டாள். தன் மாமனாரால் இந்த நிலை ஏற்பட்டதென முடிவு கட்டி மாமனாரை வாய்க்குவந்தபடி ஏசினான்.

"நான் இதுக்கு ஒரு முடிவு கண்டே ஆக வேண்டும்" திடீரென்று தன் மோட்டார்சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாகச் சென்றான். சரவணன் எங்கு போனான் என்று யாருக்கும் புரியவில்லை.

மறுநாள் நகர்ப்பகுதியில் வயோதிபர்களுக்காக இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனத்தின் ஹயஸ் வாகனம் சரவணன் வீட்டு வாசலில் வந்து நின்றது. நிலைமையை எல்லோரும் புரிந்து கொண்டார்கள்.

மஞ்சுளா விக்கி விக்கி அம்மப்பா அம்மப்பா என அழத் தொடங்கினாள். சுரேன் ஏதும் பேசாமல் தன்பாட்டில் ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தான். சரவணன் வாசுகியை அழைத்தான்.

" உன் அப்பாவுக்கு இஞ்சை இருக்கச் சரிவராது அவரை வயோதிபர் நிலையத்துக்கு அனுப்ப எல்லா ஒழுங்கும் செய்துவிட்டேன் நீ .... ஏதும் .....பேசாதே அவரது உடமைகள் எல்லாவற்றையும் கொடுத்து அனுப்பிவை.

" ஐயா உங்களைப் பிரிந்து என்னால் நிம்மதியாக வாழ முடியுமா? அம்மா இறந்த பின் எனக்கு அம்மாவாய்... அப்பாவாய்...ஆசானாய் இருந்த என் அன்புத் தெய்வமே" ... தந்தையை கட்டிப்பிடித்து அழுதாள்.கணவனின் கட்டுப்பாட்டை மீறமுடியாத நிலையில் அனலிடைப்பட்ட புழுவாய்த். துடித்தாள் வாசுகி.

அழுகுரல் மத்தியில் கனத்த உள்ளத்தோடு ஓய்வில்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுதியர் சின்னத்தம்பி விதானையார் சொர்க்கம் நோக்கி முதளர் பேணகத்திற்கு போய்க் கொண்டிருந்தார். அன்று மாலை நேரம் தனக்கு பெண் கொடுத்த மாமனை அவரின் அருமை பெருமை தெரியாதவனாய் உணராதவனாய், காலிசெய்துவிட்ட புன்முறுவலோடு வீடு வந்து சேர்ந்தான். வீட்டில் மயான அமைதி நிலவியது. நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்து....

சுரேன் வீட்டுப் பூசை அறையில் தினம் தினம் கேட்டுக் கொண்டிருந்த புனித கீர்த்தனைகள் ஒலி அடங்கிப் போய்விட்டது. தூப நறுமணம் ஓய்ந்த நிலையில் வீட்டின் பிரகாசம் மங்கிக் கொண்டேயிருந்தது.
விதானையார் அரும்பாடுபட்டு வளர்த்த காய்கறிச் செடிகள் நீரின்றி கவனிப்பாரின்றி, வாடி வதங்கிக் கொண்டிருந்தது. ஒரு சில நாட்களில் தந்தையின் பிரிவால் வாசுகி வெதும்பி வெதும்பி நூலாய் இளைத்துவிட்டாள்.
ஒட்டுமொத்தத்தில் தான் எடுத்த முடிவின் தாக்கத்தை உணரத் தொடங்கினான் சரவணன்.
ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பதை உணர்ந்து கொண்டான் சரவணன். வீடு சோபை இழந்த நிலையில் பிள்ளைகள் கவனிப்பாரற்று கட்டுப்பாடுகள் அற்று வளர்வதை சரவணன் முதல் முறையாக உணர்ந்தான்.
தன் மனைவி வாசுகியை அன்போடு அழைத்து தான் விட்ட பிழையை உணர்ந்து கொண்டதாகவும் தன்னை மன்னிக்கும்படியும் மண்டியிட்டான்.
மகிழ்ச்சி பொங்க இருவரும் ஒரே முடிவை எடுத்துக் கொண்டு பிள்ளைகளுடன் தந்தையாரிடம் மன்னிப்புக்கோரி அழைத்துவர புறப்பட்டனர்.
முதளர் பேணக வளாகத்திற்குச் சென்று உரிய அனுமதியைப் பெற்று அங்கே உள்ளே சென்றனர்.
அங்கே அவர்கள் கண்ட காட்சி இது கனவா இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனவா என்று எண்ணினார்கள்.
முற்றிலும் சிவனடியார்போல உருத்திராக்கம் விபூதி அணிந்தவராய் பல வயோதிபர்களுக்குத் தலைமை தாங்கி சிவபுராணத்தை ஆனந்தம் பொங்க பாடிக்கொண்டிருந்தார்.

தங்கள் எண்ணக் கருத்தை வெளிப்படுத்தி மன்னிப்புக் கோரி தங்களோடு வரும்படி இரந்து..கெஞ்சி வேண்டினார்கள் வருவார் என்ற நப்பாசையுடன்.

சட்டத்தின் பிடியில் நின்று ஊரெல்லாம் நல்லதையே செய்து, நல்லபடி வாழ வழிகாட்டிய கட்டை இது. இந்த வைரமேறிய கட்டையை உங்கள் கோடரியால் பிளக்க முடியாது. நீங்கள் சென்று வரலாம். எனக்கு நீண்ட பணி காத்திருக்கு. போய்வாருங்கள். எதுவும் பேசுவதற்கு முடியாத நிலையில் வெட்கித் தலை குனிந்து அமைதியற்ற உள்ளத்தோடு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர்.
வாசுகியும் சரவணனும்

யாவும் கற்பனையே
பெயர்களும் சம்பவங்களும்
யாரையும் குறிப்பிடுவனவல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீனிப் பேய்கள்

வலது கரத்திலே ஒரு ஆண் குழந்தை இடது கரத்தினால் ஒருபெண் குழந்தை தோளிலே ஒரு தோற்பை, சற்றுப் பாரமாக இருப்பதால் அது உடம்பை நிமிர்ந்து நடக்கமுடியாமல் இழுத்துப்பிடிக்கிறது. மறுபக்கம் ஒரு வயது நிரம்பிய பெண்குழந்தையின் சுமை அந்தப் பேருந்தில் அமர்ந்தவள் எங்கே போவோம்.... என்ன செய்வோம்? தொடர்ந்து இந்தப் பேருந்தில் செல்வதாய் இருந்தால் மீண்டும் ஒரு பயணச் சீட்டைப் பெறவேண்டும். பிஞ்சுவயதுக் குழந்தைகள் " அம்மா பசிக்குது என்று மழலை மொழியில் மீண்டும் மீண்டும் கூறி அழத் தொடங்குகிறார்கள். அவள் உள்ளமும் உடலும் நடுங்குகின்றது. தன் மார்புச் சட்டையை நீக்கி பெண்குழந்தையின் முகத்தை நெஞ்சோடு அணைக்கிறாள். அதைத்தான் அவளால் அந் நேரம் செய்யமுடிந்தது. திருப்திப்படாத பெண்குழந்தை வீரிட்டு அழ ஆரம்பித்தது. பின் ஆசனத்தில் இருந்த வேற்று இனத்தவருக்கு பிள்ளைகளையும் பாஷையும் அழுகையும் அவளின் நிலைமையும் விளங்கிக்கொண்டவர் போல் " பாவம் குழந்தைகள் பசிபோல் இருக்கு இதைக்கொடுங்கோ" எனக் கூறி ஒரு மலிபன் பிஸ்கட் பெட்டியை நீட்டினார். வாங்கவும் முடியாமல் அவள் உள்ளம் பதறியது. ஆண்கள் உதவி செய்ய முன்வருவார்கள். மீண்டும் உதவுவார்கள். உதவி செய்ததற்காக பின்னர் உதவுவீர்களா? இப்படிக் கேட்பார்கள். இப்படித்தான் என் வாழ்க்கையே சீரழிந்தது. இதற்கு யார் காரணம்? நானா...இல்லை....அவனா மற்றவனா? இன்று என்னை போடி விபச்சாரி என்று கூறி காறி உமிழ்ந்தானே அவனும் ஒரு மனிதன் தானே... இல்லை ...இல்லை மனித உருவில் வந்த மிருகம். அவள் கண்களில் இருந்து கண்ணீர் செந்நீராக அவள் மடியில் இருக்கும் பிள்ளைகளின் முகத்தில் விழுந்து ஒடுகிறது. ஓரளவிற்கு அவள் மனநிலையைப் புரிந்து கொண்டவராய் " சிஸ்ரர் பிள்ளைகள் பசி என அழுததால் தர விரும்பினேன் வேண்டாமா?
சொறி அங்கில் மன்னிக்கவேணும். இரு கைகளால் வாங்கி பெட்டியைப் பிரித்து பிள்ளைகள் கையில் கொடுத்தாள்.

வேற்று இனத்தவரான அவர் சற்று நேரத்தில் பேசமுற்பட்டார். " சிஸ்ரர் உங்க ஊரு எது" , "அப்பா வரலையா" , " ஏன் பேசப் பயப்படுறீங்க" தொடர்ச்சியாக கேள்விகளைப் போட்டார் அருகே இருந்தவர். அவள் உள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கென்றது. நான் நினைத்ததில் தவறேதுமில்லைப்போல் தோணுது. மீண்டும் தொடர் கதையா.... சீ! எனக்கென்ன வாழ்வு. முழவைத் தீர்மானித்தேன். .... குழந்தைகளின் முகங்கள்.... பச்சைப் பால்குழகள் தவித்துப் போய் அனாதை என்று யாரும் சொல்லக்கூடாது என்பதற்காக வாழலாமென்றால்... அதுவும் மனிதாபிமானம் என்றால் என்ன விலை என்று கேட்கும் உலகமிது என்ன அவலத்துக்குள் சிக்கிக்கொண்டேன். " பயம் வேண்டாம் சிஸ்ரர் நான் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தான்" ஆண்டவனே என்ன சோதனை " பயப்படவேண்டாம் , பேசவிருப்பமில்லையா? உங்க நாஷனல் ஐ.சீயை பார்க்கலாமா? ஒழிக்கத் தெரியாதவன் தலையாளி வீட்டில் ஒழித்த நிலையாயிற்றே, பயந்த வண்ணம் அடையாள அட்டையைக் கொடுத்தவள் கண்வெட்டாம அவரையே பார்த்துக்கொண்டிருந்தாள். ஒழக்கொண்டிருந்த பேருந்து வவுனியாவை அண்மித்துக் கொண்டிருந்தது.

" சேர் வவுனியாவில் நான் இறங்கவேணும்" அப்போது தான் பொலிஸ் உத்தியோகத்தர் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டவர் அவளது அடையாள அட்டையைக் கொடுத்ததோடு தன்னுடைய தொலைபேசி இலக்க அட்டையையும் கொடுத்தார். " சிஸ்ரர் நீங்கள் அரச புனர்வாழ்வு அடையாள அட்டையைக் கொடுத்ததோடு தன்னுடைய தொலைபேசி இலக்க அட்டையையும் கொடுத்தார். " சிஸ்ரர் நீங்க அரச புனர்வாழ்வு முகாமில் இருந்து தானே வெளியில் வந்தீர்" இது முகாம் ஐ.சீ தானே ? நாஷனல் ஐ.சீ இல்லைத்தானே.... உங்க நிலைமை எனக்கு நன்கு விளங்குது. உமது அழகு தான் உமக்கு ஆபத்தைத் தந்திருக்கு . நீர் ஒருசில காலத்திற்கு முன் ஒரு பேரழகி என்பது உமது சின்னவயது படத்திலை பார்க்கேலும்... உங்க அப்பா அம்மா ரதிதேவி என பொருத்தமாய் .... பெயர்... சூட்டியிருக்கிறாங்க பயம் வேண்டாம்... நீங்க ஒரு விடுதலை போராளி ...என்றாலே அவள் ஒரு வீராங்கனைதான். என்னுடைய ஊர் குருநாகல் தான் . யாழ்ப்பாணத்தில் தான் வேலை செய்யிறன் உம்முடைய குழந்தைகள் போல் ஆசைக்கு ஒரு ஆணும் ஆசைக்கு ஒரு பெண்ணும் இருக்கிறாங்க... இப்போதெல்லாம் அப்பா வருவார் அப்பா வருவார் என சொன்னபடியே வீதியைப் பார்த்த வண்ணம் இருப்பாங்க.. என்னைக் கண்டதும் பாய்ந்து வீதிக்கு வந்திடுவாங்க. சேர்... நீங்க...நீங்க... எவ்வளவு நல்லவராய் இருக்கிறிங்க.... நான்.... முதலிலேயே உங்களை மற்ற ஆண்களைப் போல தப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைச்சிட்டேன் சேர்.... என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ... டோன்வொறி சிஸ்ரர். நாமள் யாழ்ப்பாணத்திலை வேலை செய்யிறம் தானே... எல்லாம் விளங்கும். மோசமான நிலைக்கு உங்கள் ஆக்கள் போய்க் கொண்டிருக்கிறாங்க.... ஏனோ.... தெரியல்லை எங்களுக்கும் வேலை பார்க்கிறது மிச்சம் கஷ்ரம் தான்.

சேர் உங்க பேச்சு எனக்கு பெரிய நிம்மதியைத் தந்திருக்கு. அலைகடலில் தத்தளிக்கும் ஒருவனுக்கு ஒரு மிதப்புக்கட்டை கிடைத்ததுபோல் இருக்குசேர்.

வவுனியா வந்திட்டுது நான் இறங்கவேணும் சேர். " அதுவரையும் தான் பயணச்சீட்டு" பொலிஸ் அலுவலருக்கு அவளுடைய கடைசி வார்த்தையைக் கேட்டதும் இதயம் நின்றுவிடும் போல் இருந்தது.

போகும் இடம் தெரியாமல் நிற்கும் ஒரு அபலைப் பெண்ணாக அவர் கண்முன் நிழலாக நின்றாள். எங்கு போகவேண்டும் ? அவரிடம் பொய் பேசவே விரும்பதவளாய் " போகுமிடம் தெரியாது இறங்குகிறேன்" வாறன் சேர்... பிள்ளைகளை அணைத்தபடி படக்கென்று இறங்கினாள்.

முற்றிலும் எதிர்பார்க்காத நிலையில் திடீரென பேருந்தின் புட்போட்டில் நின்றபடி அவசர தொலைபேசி இலக்க அட்டை ஒன்றையும் அதோடு சேர்த்து ஒரு ஆயிரம் ரூபா நோட்டையும் கொடுத்து உங்கள் பிள்ளைகளுக்கென கூறி பேருந்தில் ஏறிக்கொண்டார். வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி அப்பேருந்து புறப்பட்டது.

எதையோ பறிகொடுத்தவள் போல் இப்பேருந்து மறையும் வரை பார்த்தவண்ணம் இருந்தாள். அம்மா... அம்மா... அம்மா என்ற பிள்ளைகளின் அழைப்பு அவளை நாணித் தலைகுனிய வைத்துவிட்டது. சிலமணி நேரம் என் அருகில் இருந்த ஆசனத்தில் பிரயாணம் செய்ததனால் ஏற்பட்ட சிறிய அறிமுகம் இவ்வளவு தூரம் என்னை கடமைப்பட வைத்ததோடு என் ஆனந்தமான , அசிங்கமான,, அருவருப்பான வாழ்க்கையைப் பற்றி எப்படி அறிந்தவர் போல் பேசினாரே! பிரியும் போது தன் குடும்பநிலை பற்றிக் கூறி பிரிந்தவர் ஏன்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்காக...? தன்னுடைய இரு அவசர அழைப்பு.... சாதாரண அழைப்பு இலக்கங்களை தந்து போயிருக்கிறார்.

இவரும் ஆசைகாட்டி மோசம் செய்யும் பேர்வழியோ! என் அழகே... எனக்கு ஆபத்தைத் தந்ததுமட்டுமல்ல , இந்த அவமானத்தின் சின்னங்களை ஐயோ ஆண்டவரே மன்னித்துக்கொள் . என் செல்வங்களை சுமக்கிறேன். எத்தனை காலம் சுமக்கப் போகிறேன்? வீடு வாசல் எதுவும் இல்லாத தந்தை பெயர் தெரியாத பிள்ளைகள் இவர்கள் வளரும்போது இல்லை வளர்ந்துவந்தபின் அப்பிள்ளைகளே என்னை விபச்சாரியே என்று தூற்றி காறி உமிழுமா? இந்த வசைக்கு நான் சொந்தக்காரிதான். வவுனியா பேருந்து நிலையத்தின் இருந்து நடக்கிறாள் எங்கு போவது? இருட்டிவிட்டால் எங்கே இரவைக் கழிப்பது ? என்ன அலைகள் உள்ளமென்னும் கடலில் மோதி ஆர்ப்பரிக்கின்றது. எதிரே கொழும்பில் இருந்து புறப்படும் இன்ரசிற்றி புகையிரதம்

வீதியால் திரும்பி புகையிரத நிலையப் பகுதிக்கு செல்கிறாள். முன் மண்டபத்தில் இரவு செல்லும் தபால் புகையிரதத்துக்கு மக்கள் காத்திருக்கிறார்கள். அவளும் ஒரு பிரயாணி போல ஒரு சாய்வு ஆசனத்தில் பிள்ளைகளை படுக்கவைத்தாள். அருகே அமர்ந்து கொண்டாள். கவலை தெரியாத இரு குழந்தைகளும் ஆழ்ந்த தூக்கத்தில் முடங்கிக் கொண்டார்கள். இருவர் முகங்களையும் அந்த புகையிரத மின்குமிழ் ஒளியில் நன்றாகப் பார்க்கிறாள். அண்ணனும், தங்கையும் உனக்கொரு அப்பா... அவளுக்கொரு அப்பா உங்கள் வாழ்க்கைக்கு உலைவைத்த இல்லை இல்லை என்னுடைய வாழ்க்கையை நாசமாக்கி ஆசைகாட்டி மோசம் செய்தவர்கள் வரிசையில் எத்தனை எத்தனை ஆண்கள்... இவர்கள் ஆண்கள் என்றும் சொல்லிக் கொண்டு இன்னும் அசிங்கமான வாழ்க்கையில் எத்தனைப் பெண்கள் வந்தாலும் மலரை விட்டு மலர் தாவி தேனைச் சுவைக்கும் பட்டாம்பூச்சிகளாக... சீ.. இவர்களைப் போன்றவர்களை அடித்து...குத்தி...வெட்டி அழிக்க எனக்கு ஓர் அண்ணன் இல்லை... தம்பி இல்லை. இதுதான் என் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் தீ என்றோ ஒருநாள் அவர்களைப் பொசுக்கியே தீரும். அவள் சிந்தனை சிறகடித்து கடந்த காலத்தை நோக்கிப் பறந்து விரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதிதேவி பிறக்கும்போதே அழகு தேவதைபோலவே பிறந்தாள். அதனால் அழகு தேவதையாக வளர்ந்தாள்.18 வது வயதில் பொலிஸ் பிரிவினரால் நடாத்தப்பட்ட தமிழ் சிங்கள புத்தாண்டு விழாவில் சிறப்பு நிகழ்வாக நடாத்தப்பட்ட அழகுராணிப் போட்டியில் பலரது வற்புறுத்தலின் பேரில் கலந்து கொண்டாள். விழாவில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்ற போதும் ஆணழகன் தெரிவு இடம்பெற்றது. போட்டி முடிவுகளுக்காக மக்கள் ஆவலுடன் காத்திருந்தனர். அழகுராணியாக ரதிதேவி தெரிவு செய்யப்பட்டார். என்ற அறிவிப்போடு விளையாட்டுத்துறையில் சாதனை படைத்து பாராட்டுப் பெற்ற ஸ்ரீபனும் ஆணழகனாக தெரிவு செய்யப்பட்டார் என்ற அறிவிப்பும் வெளிவந்தது. முன்னதாகவே ரதிதேவி மீது ஒரு கண் வைத்திருந்த ஸ்ரீபனுக்கு இது ஒரு வாய்ப்பான போதும் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலால் அவர்கள் விருப்பத்திற்கு மாறாகவே கட்டாய ஆட்சேர்ப்புக்கு உள்ளானதால் தம் வாழ்வின் வசந்தம் அழிந்ததை உணர்ந்தார்கள். கொடும் புயல் வீசியது. ரதிதேவியின் தாயும் தந்தையும் ஒரே பதுங்கு குழிக்குள் இருவரும் அவர்கள் உறவுகளும் அழிந்ததால் போராளியாக இருந்த ரதிதேவி அனாதையானாள். மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் அமைக்கப்பட்ட ஒரு இடம் பெயர்ந்தோர் முகாமில் நிர்க்கதியான நிலையில் இருந்த ரதிதேவியின் பின்னும் முன்னும் சுற்றுவதைத் தொழிலாகக் கொண்டான் ஸ்ரீபன். அவள் வெறுத்ததோடு உன்மதம் வேறு என் மதம் வேறு, என் பின்னே சுற்றாதே என பல தடவை எச்சரித்தாள், உன்னுடைய அழகுக்கு என்னைப் போன்ற உடற்கட்டுள்ளவன் தான் பொருத்தம் எனக் கூறியவன் நள்ளிரவு நேரம் தன் எடுபிடிகளின் உதவியோடு ஆசை காட்டி மோசம் செய்ய முற்பட்டான். அவளுடைய சக்தியை மீறி எல்லாம் நடந்து முடிந்து விட்டது.

அவள் கசங்கிய மலராக்கப்பட்டாள். அழகு மல்லிகையின் இன்பத் தேனைக் குழப்பதில் மதிமயங்கிக்கிடந்த ஸ்ரீபனுக்கு தான் தாயாகும் பாக்கியம் கிடைத்து விட்டதாக மகிழ்வுடன் தெரிவித்தாள். அவன் அந்த சந்தோஷமான செய்தியை வேண்டா வெறுப்பாகக் கேட்ட நிலை அவளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இரண்டு நாள்களின் பின் ஒரு காட்வில்லைகளைக் கொடுத்து இவ்வில்லைகளைத் தவறாது பாவிக்கும்படியும் குழந்தை வளர்ச்சிக்கும் உமது உடம்புக்கும் நல்லதெனக் கூறிச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகம் கொண்ட ரதிதேவி முகாமிலுள்ள மருத்துவமாதுவிடம் விடம் வில்லைகளைக் காண்பித்து உரையாடியபோது பெரும் அதிர்ச்சி அடைந்தாள். தன்னுடைய செயற்பாட்டை ரதிதேவி அறிந்துவிட்டாள் என்ற நிலையில் இருவருக்கும் ஏற்பட்ட தாக்கம் பிரிவில் முடிந்தது. காலங்கள் நகர்ந்தது. முகாமிலேயே ஒரு ஆண் குழந்தைக்குத் தாயான அபலையாக தனது சொந்த ஊருக்கு வந்த போது அவள் பேரழகில் மயங்கிய பலர் அவளுக்கு உதவுவதாகக் கூறி அவள் அன்னைப்பெற பலர் முன்வந்த போதும், தன் முதல் அனுபவத்தை வைத்து மிகவும் நிதானமாக நடக்க முயற்சித்தும் தனக்கொரு ஆண் உதவி தேவை என்பதை ஏற்ற நிலையிலும் பலர் அந்த அழகியை அடைந்து விட வேண்டுமென்பதை துடியாய் துடித்தார்கள். அவள் அழகே அவளுக்கு இயமனாக பின் சுற்றியது. மீண்டும் சந்தர்ப்பவசத்தால் ஒரு வாலிபனுடைய வலையில் வீழ்ந்தாள், நம்பினாள், முழவு மீண்டும் ஒரு குழந்தைக்குத் தாயானாள். தன் ஆவலைப் பூர்த்தி செய்து இன்பத்தில் திளைத்த அவனாலேயே நீ ஒரு விபச்சாரி தானே; என்னை எப்படி நீ பிழைத்தாய் என்பது எனக்குத் தெரியும் என வசை பாடினான். சில நாட்களில் மீண்டும் ஒரு பெண்ணை வரதட்சணையுடன் கட்டிக்கொண்டு வாழ்வதாக அறிந்தபோது தன் விதியை நொந்து புலம்பினாள். தன் பிள்ளைகளை வளர்க்க பல அலுவலகங்களுக்கும் வீடுகளுக்கும் வேலை தேடி அலைந்தாள். பேரழகியாகப் பார்த்த சமூகம் அவளை ஓர் அனாதையாக, விபச்சாரியாகப் பார்த்தபோது அவள் வாழ்வையே முடிக்க எண்ணினாள்.

ஆனால் என் வயிற்றில் வளர்ந்த செல்வங்கள அழிக்கும் உரிமை உண்டா?

இதே கேள்வி அவள் உள்ளத்தை ஆட்டிப்படைத்தது. என்ன செய்யலாம்? வேண்டாம் எம் இனத்தின் மத்தியில் எம் ஊரில் காமுகர்களின் கண்முன்..... கொழும்பு போவதற்கு ஆயத்தமான பேருந்தில் வவுனியா பிரயாணத்திற்கான சிட்டை பெற்றுக் கொண்டவள் வவுனியாவில் இறங்கி வவுனியா புகையிரத நிலையம் வரை சென்றவள், பிள்ளைகளை அணைத்தபடி உறங்கிவிட்டாள். விழித்த போது ஒரு பிணந்தின்னிப் பிசாசு உருவில் எதிரே நின்றவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் அழகுக்கு நான் அழமை, என்னைத் தடுக்காதே". அவள் சுவக்குரலுக்கு யாரும் அபயம் அளிக்கவில்லை. கொடுங்கோலனால் குதறப்பட்ட அழகின் மறுவடிவம் ரதிதேவி சிலமணி நேரத்துக்கு முன்பதாக தன்னிடம் கொடுக்கப்பட்ட இரு தொலைபேசி இலக்கங்களுக்கும் மீண்டும் மீண்டும் டயல் செய்து தானும் பிள்ளைகளும் ஆபத்தில் சிக்கியிருப்பதாக அறிவித்தாள். பிள்ளைகளை புகையிரத மேடையில் வளத்தினாள். எதிரே வந்து கொண்டிருந்த புகையிரதத்தின் முன்னே பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாள். பிள்ளைகள் அந்த மின் வெளிச்சத்தில் கவலை அற்றவர்களாக ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஓடிக் கொண்டிருந்த புகையிரதம் தன் வேலையை முடித்துக் கொண்டு அப்பால் போய் நின்றது. புகையிரதச் சாரதி ஒரு பெண் தன் வண்டிமுன் பாய்ந்து தற்கொலை செய்துள்ளதாக அறிவிக்க, முன் அவசர பொலிஸ் பிரிவுக்கு அவளால் அனுப்பப்பட்ட செய்தி கிடைத்து அப்பிரிவினர் வந்து விசாரணை செய்ய முற்பட்டபோது பொலிஸ் பிரிவின் இரு இலக்கங்கள் கிடைத்தது. சிலமணி நேரத்தில் குருநாகலுக்குப் போய்ச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரும் வந்து சேர்ந்ததோடு கண்ணீர் சொரிந்து நின்றார். அந்நேரம் எங்களுக்கு பஸ்ஸில் பிஸ்கட் தந்த அங்கிள் நீங்களெல்லோ ..ஒரு கணம் அந்த மனிதாபிமானம் மிக்க சிங்க சகோதர இனத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் மாலையில் நடந்துமுடிந்து விட்ட விடயங்களை சாட்சியமாகக் குறிப்பிட்டார். அப்பிள்ளைகளைப் பிரிய மனமில்லாத பொலிஸ் உத்தியோகத்தர் தன் மனைவியின் பூரண சம்மதத்துடன் அப்பிள்ளைகளைத் தந்தெடுத்து மகிழ்வுடனும், மனவேதனையுடனும் கொண்டு சென்றார்.

பூநகர் பொன். தில்லைநாதன்
(பூநகரான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றோ விதைத்தது

அன்று ஜனவரி எட்டாம் நாள். விடிவை அறிவிக்கும் சேவல் கூவவில்லை. காகம் குருவி கரையும் ஒலி கேட்கவில்லை. அதற்கு முன்னதாகவே வாசுகி படுக்கையை விட்டு எழுந்து விட்டாள். அவளுக்கு அன்றைய நாள் வாழ்வில் ஒரு பொன்னாள். சோதனை பாதி..... வேதனை பாதி எனக் கடந்து போன நாட்களுக்கு முற்றுப்புள்ளி இடும் நாளும் கூட. அன்று அவளது இருபதாவது பிறந்தநாள். கடந்து போன பத்தொன்பது வருடங்களிலும் பிறந்தநாள் வந்து போகும். அதைப்பற்றி சிந்திக்கும் தகுதி கானல் நீர் தான். அன்று அவள் புதிதாக ஆசிரியத் தொழிலில் கால் பதிக்கும் நாளும் கூட. அதுவே அவளது வாழ்வில் பொன்னாள்.

அயற்கிராமத்தில் அண்மைக்காலத்தில் சாதனைபடைக்கும் கல்விக்கூடமாக சாந்தசோலை கலைமகள் வித்தியாலயத்தில் பதவியேற்கும் நாள். தந்தையின் முகத்தைக் கண்டறியாத அவள் தாயின் அரவணைப்பில் அந்த சிறிய குடிசையில் இருதசாப்தங்களை கழித்துவிட்ட அவள். தாயிடம் முன்வைக்கும் வினாவுக்கு அவள் தாய் "உனக்கு அப்பா இல்லை அந்தப் பேச்சை நிறுத்து" இக்கட்டுப்பாட்டை போட்டு வளர்த்து விட்டாள் அவள் வளர்ந்த பெண்ணாயிற்றே "உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாது" இது வாசுகியின் தாய் பாக்கியத்துக்கும் தெரியும். தன் ஏழ்மையை போக்க அவள் தேர்ந்தெடுத்த தொழில் அப்பம் சுட்டு கடைக்கு கொடுப்பது. அதனால் அப்பக்கார பாக்கியம்" என்ற பெயரே அவளுக்கு ஊரார் இட்ட பட்டப் பெயராயிற்று.

சேலை கட்டி பழக்கப்படாத வாசுகி ஒன்றுக்கு பல தடைவைகள் சேலையை கட்டி சரிப்படுத்திக் கொண்டாள். "அம்மா" அழைப்புடன் தாயருகே ஓடிச்சென்றாள். "காலம் ஒருநாள் மாறுமென்பேன்" காலம் மாறப் போகிறது "இனி நீ அப்பக்கார பாக்கியம் இல்லை வாசுகி ரீச்சர் அம்மா பாக்கியம்" மகளை கட்டி அணைத்து முத்தமிட்டு கண்ணீர் பொங்கிவர விடை கொடுத்தாள். மெல்ல மெல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடி வைத்து பத்தாண்டு காலமாக தன்னைச் சுமந்து தன்னை இந்நிலைக்கு உயர்த்திட்ட உயிரற்ற ஜீவன் அந்த லேடிஸ்சைக்கிளைத் தொட்டு கண்ணில் வைக்கிறாள். நன்றி உணர்வுடன் நகர்த்தி அதன் மீது ஏறி அமர்ந்து கொண்டாள். கால்கள் பெடலை மிதிக்கிறன்றன. அவள் உள்ளமோ கற்பனைக்கெட்டாத உலகமெலாம் சென்று சுற்றி வருகிறது. கண்ணீர் ஆறாக ஒடுகிறது. அக்கண்ணீர்த் துளிகள் அவள் கதையை காற்றில் கலக்க வைக்கிறது. பத்தாவது வயது வரை தன் வீட்டின் பக்கத்தே உள்ள ஆரம்ப பாடசாலையில் கல்வியை நிறைவு செய்தவள் அடுத்த வகுப்பிற்கு நகரப் பாடசாலைக்கு செல்ல எந்த வசதியும் வாய்ப்பும் இல்லாத நிலையில் வாசுகியின் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள் தாய். சுட்டிப் பெண்ணாக வளர்ந்த வாசுகி "நான் நடந்து போயாவது படிப்பேன்" பிடிவாதமாய் நின்றாள். "உனரை சின்னக் காலாலை எப்படியம்மா இவ்வளவு தூரத்துக்கு போகப் போகிறாய்." இது தாயின் குமுறல்.

ஒரு வாரமாக நகரப் பாடசாலைக்கு போன வாசுகி அலுத்துப் போய் விட்டாள். அன்று பாடசாலை விட்டவுடன் கொழுத்தும் வெய்யிலில் ஓட்டமும் நடையுமாக வீடு திரும்பும் வழியில் சந்தைப் பக்கமாக பெரும் சனக்கூட்டம் நிறைந்த வாகனமொன்றில் பல கண்ணைக் கவரும் பரிசுப் பொருட்கள் ஆண்கள், பெண்கள், துவிச்சக்கரவண்டி, தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிக் பெட்டி எனப் பல பொருட்கள். ஒலிபெருக்கியில் விளம்பரம் தொடர்கிறது "பொங்கல் திருநாளையொட்டி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் சீட்டிழுப்பு. இப்பொருட்கள் நாளை உங்களுடையதே" சிறியவளான வாசுகியின் சிந்தனை விரிவடைகிறது" ஒரு சீட்டை வாங்கி விட்டால் எனக்கு இந்த சைக்கிள் கிடைத்து விட்டால்..... பணம் வேண்டுமே..... இதுவரை நாள் நான் போட்ட சில்லறை ஐம்பது வந்து விட்டால் போதுமே" விரைந்து வீடு செல்கிறாள் தாயின் அனுமதியைப் பெறவும் அவகாசம் இல்லை ரிக்கற் முடிந்து விட்டால் ..... உண்டியலை பிரிக்கிறாள் மூச்சு விடாமல் எண்ணிமுடித்தாள். "அப்பாடா ஐம்பது ரூபாவுக்கு மேல் வந்து விட்டது" பொட்டலமாக கட்டிக் கொண்டு தாய்க்கு விபரத்தை கூறிவிட்டு வந்து சேர்ந்து விட்டாள். "அண்ணை எனக்கு ஒரு ரிக்கற் தாங்கோ" "என்ன இது" சீட்டு விற்பனையாளனின் அதட்டல். ஐயோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணை சில்லறைக்காசு..... என்ன உண்டியல் உடைச்சுக் கொண்டே வாறாய்..... உது எண்ண நேரமில்லை பரிதாபமாக நின்றாள் வாசுகி. விற்பனையாளன் அவளையும் நாணயப் பொட்டலத்தையும் மாறி மாறிப் பார்த்தான். இந்தா ரிக்கற்..... ஒரு சீட்டைக் கொடுத்தவன் சில்லறையைக் கொண்டு போய் உண்டியலுக்கை போடம்மா என்றான். "நன்றியண்ணை" என்று கூறிய வாசுகி புன்முறுவலோடு வீட்டுக்கு வந்து தாயிடம் விடயத்தை சொன்னாள். இப்பிடியான பிள்ளையளும் இந்தக் காலத்திலை இருக்குதுகள் ஆரோ நல்ல தாய் தகப்பனுக்குப் பிறந்த பிள்ளை போல கிடக்கு இந்த வார்த்தைகள் வாசுகிக்கு தீக்கொள்ளி கொண்டு சுடுவது போல் இருந்தது. அப்போ அவள் பேசும் சக்தி அற்றவள் தானே.....

மறுநாள் பொங்கல் திருநாள் அவர்கள் வீட்டில் பொங்கலும் இல்லை புக்கையும் இல்லை. அவளது குடும்ப நிலையில் அது போன்ற நிகழ்வுகள் எட்டாக்கனியே. வாசுகி வீட்டு முற்றத்தே வந்து வானத்தை அண்ணாந்து பார்க்கிறாள். வருண பகவான் தன் கதிர்களை வீசியபடி மேலெழுந்து விட்டான். தைமாத வெயில் பரந்து எறிக்கிறது. சீட்டிழுப்பை 10 மணிக்கு ஆரம்பிப்பதாகவே நேற்றே அறிவித்தார்கள். தாயிடம் அனுமதி பெற்றுக்கொண்டு வீட்டு செத்தையில் தொங்கிக் கொண்டு இருந்த நாட்காட்டி விநாயகரை மனமுருகி வேண்டிக் கொண்டு சீட்டிழுப்பு மைதானத்தை நோக்கி விரைந்தாள். ஊரெங்கும் பொங்கல் நேர பட்டாசு வெடிக்கும் ஒலி காதைப் பிளந்தது.

அப்பாடா வந்து சேர்ந்து விட்டேன். ஏகப்பட்ட சனக்கூட்டம் அரங்கில் பரிசுப் பொருட்கள் அலங்காரமாக ஒழுங்கு பண்ணப்பட்டு காட்சியளித்தன.

சிறுமியவள் அப்பொருட்களின் மீது கண்ணை நகர்த்துகிறாள். என் மனக்கோட்டை இடிந்து விடுமா? என் பெருந்துன்பம் நீங்க இன்று வழிபிறக்குமா? திடீரென அவள் சிந்தனை கலைகிறது. மக்கள் கூட்டம் அரங்கை நெருங்கி ஓடிச் செல்கிறார்கள் சீட்டிழுப்பு ஆரம்பிப்பதற்கான அறிவித்தல் ஒலிபெருக்கியில் இருந்து ஒன்றுக்கு பல தடவை ஒலிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பெட்டிகளில் இருந்து இரு சீட்டுக்களை இருவர் எடுக்கின்றனர். ஒன்று பரிசுப் பொருள் மற்றையது பரிசுக்குரிய இலக்கம். ஆறுதல் பரிசுகளின் இலக்கங்கள் பரிசுகள் அறிவிக்கப்படுகின்றது. வாசுகியின் உள்ளமோ அமைதியற்ற நிலையில் குமுறுகிறது. என் நம்பிக்கை வீண் போய்விடுமா?

முதலாம் பரிசுக்குரிய பொருளின் பெயர் சீட்டு பெறப்பட்டு விட்டது. இதோ அதற்குரிய சீட்டு இலக்கம் தெரிவு இடம்பெறும் அறிவித்தல் கேட்கிறது. நிறைந்திருந்த மக்கள் கூட்டம் தங்கள் சீட்டுக்களை கையில் வைத்து இமை வெட்டாமல் பார்த்திருக்கின்றனர். வாசுகியும் அதே நிலையில் பரிசுக்குரிய இலக்கம் மீண்டும் மீண்டும் அறிவிக்கப்படுகிறது. 8888 வாசுகி அமைதியாக தன்சீட்டை பார்க்கின்றாள். மீண்டும் ..... மீண்டும் ..... பார்க்கிறாள் சந்தேகமில்லை அவளுடைய சீட்டு இலக்கமும் அதுவே ..... யாரும் சீட்டைப் பறித்து விட்டால் அமைதியாக நிற்கிறாள். கால் நிலத்தில் பதிந்திருப்பதாக அவளால் நம்ப முடியவில்லை. சீட்டிழுப்பு முடிவடைகிறது. மக்கள் கூட்டம் நம்பிக்கை இழந்த நிலையில் வீடு திரும்ப ஆரம்பித்து விட்டனர். அங்கு அருகே சென்று தனக்கு அந்தச் சீட்டை பணத்தை பெறாமலே தந்த அந்த அண்ணாவை தேடுகிறாள். எங்கும் அவரைக் காணவில்லை அன்று அவரது பெயரையாவது கேட்டிருக்கலாம் தவறு விட்டு விட்டேன். மனம் நொந்து கொண்டாள். மேடையில் உள்ள பெரியவர் ஒருவரிடம் சீட்டைக் கையளிக்கின்றாள். ஆச்சரியமாக அவளைப் பார்த்தார் அவளைத் தூக்கி மேடையில் நிறுத்தினார். கரகோசம் ஒலிக்கிறது. 6ம் வகுப்பு பள்ளி மாணவி வாசுகி என்பவர் முதலாம் பரிசைப் பெற்றுள்ளார் என்ற அறிவிப்பு காற்றோடு கலந்து பரவுகிறது. அங்கிருந்த சில பள்ளி மாணவிகள் அவளுக்கு அருகே வந்து வாழ்த்தை தெரிவித்துச் சென்றார்கள்.

பாக்கியம் வீட்டு முகப்பில் ஒரு புனர்வாழ்வுக் கழக வாகனம் வந்து தரித்து நின்றது. பாக்கியம் ஓடி வந்தாள். சிலையாய் நின்றாள். வாசுகி புத்தம் புதிய லேடீஸ் சைக்கிள் பரிசுப் பொருளுடன் சிரித்த முகத்துடன் இறங்கினாள். அவள் வஞ்சகம் இல்லா சிரிப்பு நம்பிக்கையின் ஒளியானது. தனது புதிய பாடசாலைக்கு வந்து விட்டதை வெண் உடை அணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையாய் வரும் சின்ன சிட்டக்களைக் கண்டு கொண்டதை அடுத்து உணர்ந்து கொண்டாள்.

"புது ரீச்சரா நீங்கள்? வாங்க மிஸ் குட் மோனிங் மிஸ்" சிறு சிட்டுக்களின் மழலைக் குரல் மிகுந்த சந்தோசத்துடன் ஆயிரம் எண்ணக்கனவுகளுடன் உள்ளே நுழைந்த வாசுகி அனுமதியுடன் "அதிபர் அலுவலகம்" என்ற பெயர் பலகையை பார்த்த வண்ணம் உள்ளே நுழைகிறாள். அதிபரைப் பார்த்து வணக்கம் சொன்னாள். சிரித்த முகத்துடன் பார்த்து வணக்கம் கூறியதுமே அவள் அதிர்ச்சி உற்றவளாய் நின்றாள். முன் ஆசனத்தைக் காட்டி "அமருங்கள்" என்றார் வைத்த கண் வாங்காமல் அவரையே பார்த்து நின்றாள். அவரே தான்!..... அவர் வேறு யாருமல்ல, பத்து ஆண்டுகளுக்கு முன்பதாக தனக்கு இலவசமாக லொத்தர் சீட்டை வழங்கிய அந்த உத்தமர், சந்தேகமே இல்லை அருகே சென்றவள் அவர் கால்களைத் தொட்டு வணங்கி எழுந்தாள் நீங்கள் எனது அதிபர் மட்டுல்ல, எனது தெய்வமும் கூட என்றாள். அதிபருக்கு ஒன்றுமே புரியவில்லை. திருதிருவென முழித்தார் "நீங்கள் பத்தாண்டுக்கு முன்பதாக அந்த ஒரு சீட்டுத்தான் என்னை இந்நிலைக்கு உயர்த்தியது" என்றாள். அதிபர் உள்ளத்தில் பால் முகம் மாறாத பாலகியாக சில்லறைகளோடு நின்று கெஞ்சிய முகம் நிழலாடியது.

பண்பான உள்ளங்கள் இருவரின் சங்கமம் அப்பாடசாலையை சாதனை படைக்கும் பாடசாலையாக உயர்த்தியது அதன் வெளிப்படையாக இருவர் உள்ளமும் வாழ்வில் சங்கமித்தது.

பூநகர் பொன்.தில்லைநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திர பாசம்

பூநகரிப் பிரதேசத்தில் பழம்பெரும் கிராமம் அது. சரித்திரப் பிரசித்தி பெற்ற பல தொன்மையான எச்சங்கள் புதைந்து கிடக்கும் உயர்ந்த மண் குன்றுகள் நிறைந்த அழகு பொலிந்த அக்கிராமம் பனை தென்னை வளங்களுடன் கடல்வளமும் நிறைந்து இன்று பல சுற்றுலாப் பயணிகளின் கண்ணுக்கு விருந்தளிக்கும், சிற்றூர்தான் கௌதாரிமுனை. அக்கிராமத்தின் தொன்மை வரலாற்றை எடுத்தியம்பும் சோழர் காலத்துச் சிவன் ஆலயமும் இடிபாடுடன் இன்றும் காட்சியளிக்கும். அவ்வூரிற் பரம்பரை பரம்பரையாக உடையார் வேலையைச் செய்து ஓய்வுபெற்ற முருகேசு உடையார் என்றால் தெரியாத எவரும் அப்பிரதேசத்தில் இல்லையெனலாம்.

பேரோடும், புகழோடும் வாழ்ந்து வந்த முருகேசு உடையார் வீட்டில் அந்தச் சோகச் சம்பவம் நடைபெற்று இன்று ஆறாவது நாள். நேற்று ஐந்தாவது நாள்தான் எட்டுச்செலவு என்று சொல்லப்படுகின்ற இறந்த ஆத்மாவுக்காகச் செய்யப்படும் கிரியைகள் தடல்புடலாகப் பெரும் செலவுடன் நடைபெற்று முடிந்தது. உடையாரின் மனைவி செல்லம்மாவின் படத்தின் முன்னே பலதரப்பட்ட உணவுவகைகள், பழவகைகள், இறைச்சி, மீன், பலகாரங்கள், குடி வகைகள் எனப் படைத்துப் பொழுது கருகும் செக்கல் நேரத்தில் பலர், பந்தம் ஒருகையில் ஏந்தி படைத்த பண்டங்களை எடுத்துச் சென்று கிரியைகள் நடைபெற்ற இடத்திற் படைத்து மீண்டனர்.

எடுபிடிகளாய் வேலையில் ஈடுபட்ட பலருக்கு உடையாரின் உபயமும் கிடைத்தது. அவர்கள் எதுவித கவலையும் அற்றவர்களாக வயிறு புடைக்கக் குடித்துக் கும்மாளம் போட்டுப் பல்சுவைமிக்க எஞ்சிய உணவுகளையும் வயிற்றிற் போட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டகளை கொண்டவர்களாக முன் முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த தகரப் பந்தலுள் குறட்டை விட்டபடி புரண்டு, புரண்டு உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

நேரம் நடுச்சாமமாகிவிட்டதென்பதை உலகுக்குப் பறைசாற்ற சாமக்கோழிகள் பலதடவை கூவி ஓய்ந்தன. இந்த அகாலநேரம். முருகேசு உடையாரின் உள்ளம் அமைதியின்றி சார்மனைக்கட்டிலில் கிடந்தவண்ணம் அங்குமிங்கும் புரண்டவண்ணம் அமைதி இழந்த நிலையில் தவித்துக்கொண்டிருந்த. அவரின் உள்ளக் குமுறலை யாரும் பகிர்ந்துகொள்ளவோ.... ஆறுதல் கூறவோ இல்லாத நிலைமைதான் அங்கு இருந்தது. " நான் தவறு செய்திட்டன்"

"என்னால் வந்தவினைதான் எல்லாம்" அவரது வாய் மீண்டும் மீண்டும் முணுமுணுத்து ஓய்கிறது. அருகே இருந்த சுங்கானை எடுத்தார். கொட்டப் பெட்டியில் இருந்த புகையிலையை எடுத்துச் சுங்கானில் அடைக்கிறார். தீப்பெட்டியைத் தட்டிப் பற்றவைத்து புகையை இழுத்து இழுத்து வெளியே தள்ளுகிறார். இன்று ஆறாவது நாள் இதுவரையும் ஐந்து நாட்களாக உறவினர்கள் அயலவர்கள் என்று தங்கியிருந்தவர்கள் மெல்ல ... மெல்ல உடையார் வீட்டில் இருந்து பயணம் சொல்லித் தங்கள் இருப்பிடம் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். உடையார் வீட்டில் நீண்ட நாட்களாகப் பணிவிடை செய்துவரும் சங்கரனும் பண்ணை மாடுகளை மேய்த்துப் பட்டியில் அடைக்கும் வேலனும் தான் தஞ்சம். அடிக்கடி வரும் உடையாரின் தங்கை முறையான சரசுதான் துணை. அடிக்கடி வந்து போவாள். ஆசைப்பண்டங்கள் செய்யும்போது அப்பண்டங்கள் உடையார் வாயிலும் சுவை ஊட்டும். "அவளாவது எனது பாசத்திலை அதை..... இதைச் செய்து தாறாள். வேறை ஆர் என்னைக் கவனிக்கப்போகினம். எல்லாம்நான் தேடின வினை" இப்படியே சொல்லிச், சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் வெதும்பிக் கண்ணீர் சிந்திய நிலையில் அவர் கண்ணில் இருந்து வழிந்தோடும் கண்ணீர் அவரது கதையைக் கூறி ஆறாய்ப்பாய்ந்து கொண்டிருக்கிறது.

வளம்மிக்க அக்கிராமத்தில் நான்காவது தலை முறையாக உடையார் வேலையைச் செய்து சேவையில் இருந்து இளைப்பாறி ஓய்வூதியம் பெற்றுச் சிறப்புடன் பெரும் செல்வந்தராக, உடையார் பரம்பரை முதுசங்களாகப் பெருந்தென்னந்தோப்புக்கள், பனந் தோப்புக்கள், நெற்காணிகள், மாட்டுப்பட்டி, எருமைப்பட்டி என்பனவும் இவற்றைக் கவனிக்க, பராமரிக்க எடுபிடி ஆட்கள் எல்லாம் ஒருங்கே கொண்ட உடையாருக்கு மூன்று ஆண் பிள்ளைகளும் இருந்தனர். தனது தந்தை தமக்கு எப்படிக் கல்வி போதித்து உயர வைத்ததுபோல் தான் மூன்று பிள்ளைகளையும் கிராமத்தில் பெற்ற ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து யாழ். நகரில் பிரபலமான கல்லூரியில் தமது உயர் வகுப்புக் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த காலகட்டம் அது, பாடசாலை விடுமுறைக்காலம் என்றால் யாழ். நகரப் பாடசாலை ஒன்றின் பள்ளி நண்பர்கள், ஒத்தார் குழுக்கள் முருகேசு உடையாரின் வீட்டிற்கு வருவதும், அவ்வூரின் எழில் கொஞ்சும் அழகைக் கண்டு களிப்பதும், விருந்தோம்பும் பண்பில் உயர்ந்து நிற்கும் உடையார் மனைவி செல்லம்மாவின் அறுசுவை உணவுகளையும், அவ்வூரின் பனம்பண்டங்களை உண்பதுக்குமெனப் போட்டி போடுவதும் அவர்களுக்குப் பெரும் மனமகிழ்வாக உபசரணை செய்வதும் தங்கள் பிள்ளைகளைப்போலவே வரவேற்பதும் உபசரிப்பதும் அம்மாணவர்களுக்கு உடையார் குடும்பத்தின் மீது மிகுந்த பற்றையும், இறுக்கமான பிணைப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

பாடசாலை விடுமுறை காலத்தின்போது அவர்களின் குக்கிராமத்தை நோக்கி படையெடுக்கும் நகர்ப்புற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு வழங்கி உபசரிப்பதற்காகப் பனையோலைகளால் இழைக்கப்பட்ட உமல்களில் புழுக்கொடியல், தோட்டுப்புழுக்கொடியல் பாணிப்பனாட்டு என பனம் பண்டங்களைச் சேர்த்துப் பாதுகாப்பாக வைத்து வழங்கி மகிழும் செல்லம்மாவின் பண்பு அவர்களது பரம்பரையாக வந்த சிறப்பியல்பாகும்.

பூநகரி மொட்டக்கறுப்பன் அரிசிப்பிட்டும், பச்சைப்பெருமாள் அரிசிச் சோறும், ஓடியற் கூழின் சுவையையும் நன்கு ருசித்த நண்பர்கள் கூட்டம் இக்கிராமத்துக்குவர நான் முந்தி நீ முந்தி என நிற்பதும் அவர்களைச் சமாதானப்படுத்தி அடுத்த விடுமுறைக்கு நீங்கள் எனச் சொல்லிச் சமாளிப்பதிலும் அவர்களுக்குப் பெரும் சங்கடமும் ஏற்பட்டுவிடும்.

அடுத்த வருடம் ஏப்பிரல் மாத விடுமுறைக்குப் பூநகரிக்கு வந்து அவ்வூர் வனப்பைக் கண்டு இரசிக்கச் சுவையான தம்மூரில் கிடைக்காத உணவுகளை உண்ணப்பெரும் ஆசைகொண்டவர்களாக உடையாரின் பிள்ளைகளின் ஒப்புதலையும் பெற்றுக் கொண்ட மாணவர்கள் நாட்களை எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

அன்று ஒருநாள் பல இடங்களில் துப்பாக்கிவேட்டுச் சத்தங்களால் நகர்ப்புறம் அதிர்ந்த பல இடங்களில் பாதைத் தடைகள். பஸ்களில் சோதனை, வீதிகளில் ரயர்கள் போட்டு எரிப்பு, இப்படியே பல சம்பவங்கள் இனவிடுதலைக்கென முனைப்புப் பெற்று வளர்ந்து வந்த இரு குழுக்களிடையே பெரும் மோதல் பல இடங்களில் தமிழ் இளைஞர்கள் போட்டிக் குழுக்களால் வேட்டையாடப்பட்ட நிலை ... பல கொலைகள் மக்கள் செய்வதறியாது போராளிக் குழுக்களை வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தனர். " ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு வேட்டைதானே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தலை விதியை எண்ணியெண்ணித் தலையைப் போட்டு உடைத்தார்கள் தமிழ் புத்தி ஜீவிகள். தமிழர் தலைநகர் தடம் புரண்டது. நகர் வெறிச்சோடியது.

யாழ்.நகரின் பதட்டநிலைஅறிந்த உடையாரும் மனைவியும் கடலுக்கப்பால் துறையை நோக்கிய படி தம்பிள்ளைகள் நிலை தெரியாத திகைப்பில் ஆழ்ந்தார்கள். நேராத கோயில் எல்லாம் நேர்த்தி வைத்தார்கள். செல்லித்தீவு அம்மனுக்கு, திகிரி விநாயகருக்கு சோபாலபிட்டி சித்திவிநாயகருக்கென வெள்ளைச் சீலைத்துணி எடுத்து மஞ்சள் தண்ணிபூசி சில்லறை முடிந்து வேப்பம் பத்திரிகையோடு தலைவாசல் நிலையில் கட்டி மண்டாடிக் கொண்டிருந்தனர். யாழ். நிலையை அடுத்து சங்குப்பிட்டி கேரதீவுப் படகுச்சேவையும் நிறுத்தப்பட்டு படையினரின் காவல் முடுக்கி விடப்பட்டதை அறிந்து ஒருநிலையில்லாமல் தவிர்தார்கள் உடையாரும் மனைவியும்

"ஐயா நீங்கள் காலாகாலாம் தெய்வங்களுக்கு ஒருகுறையும் விடேல்லை பங்குனிவிழாவும் சிறப்பாகத் தானே செய்த நீங்கள செல்லி அம்மன் உங்கடை பிள்ளைகளுக்கு ஒரு கஸ்டமும் வரவிடா கவலைப்படாதையுங்கோ" சங்கரனும், வேலனும் ஆறுதல்கூறிக் கொண்டேயிருந்தார்கள். அன்று அவர்கள் வீட்டில் அடுப்புக்கூட பற்றவைக்காத நிலையில்...

அன்றைய நாள் யாழ். நகரமே அதிர்ந்துகொண்டிருந்தது. பல இடங்களின் சந்திகளில் தீமூட்டப்பட்டு எரிந்து கொண்டிருப்பதாகவும் சில இடங்களில் மோதல்களில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களின் உடலங்கள் தமிழிளைஞர்களினால் எரிக்கப்படுவதாகவும் பாடசாலை விடுதிக்கு வந்த பாடசாலைக் காவலர்கள் மூலம் செய்தி அறிந்த மூன்று சகோதரர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியும் வீட்டிற்கு போய்ச் சேர வேண்டும். "அம்மா எந்த நிலையில் இருப்பாளோ தெரியாது" பெரும் பீதியுடன் நள்ளிரவு நேரத்தில் பாடசாலை விடுதியின் பின்புற மதிலாற் குதித்துக் கண்டி வீதி வழியே நாவற்குழியை நோக்கி நடக்கத் தொடங்கினர். சந்தியை அண்மிக்கும் போது சந்தியில் பெருஞ் சுவாலைவிட்டு எரிந்த தீ மெல்ல மெல்ல அணைந்துகொண்டிருந்தது. அந்த வெந்தணலில் இரு உடலங்கள் எரிந்து கருகிய நிலையிற் கண்ட சின்னவன் செந்தில் அண்ணன் சரவணனைக் கட்டிப் பிடித்தபடி அழத்தொடங்கினான். அவனுக்குத் துணிவையூட்டிக் கண்டி வீதியில் இருந்து பிரியும் கேரதீவு வீதியில் நடக்கத் தொடங்கினார். யாருடைய கண்ணிலும் படாமல் கேரதீவுக் கரையை அடைந்துவிட்டால் வள்ள ஓட்டம் இல்லாவிடினும் மீன்பிடி வளங்களிலாவது சங்குப்பிட்டித் துறைக்குப் போய் விட்டால் வீடுபோய்ச் சேர்ந்ததுக்குச் சரி என்று சொல்லிக்கொண்டு வேகமாக நடந்துகொண்டிருந்தனர். பசிக்களை , நீண்டதூரம் நடந்த அலுப்பு பெரும் சிரமத்துடன் தனங்கிளப்பு, மறவன்புலோ, அறுகுவெளி என அச்சிற்றூர்களின் பரந்து விரிந்து பச்சைப் பசேலெனக் காட்சியளித்த அவ்வயல் வெளியினூடாக நீண்டு செல்லும் அவ்வீதியில் நடந்துகொண்டிருந்தனர். மாரிகால மழைக்கும் கடற்காற்றும் அவர்கள் உடலில் மோதித் துன்பத்தை ஏற்படுத்தும் நிலையில் நம் ஊரைச் சென்று அடைந்துவிட வேண்டுமென்ற ஒரே நோக்கில் வயல்வெளிகளைத் தாண்டி கடல் நடுவே ஊடறுத்துச் செல்லும் பாதையிலே நடந்துகொண்டிருக்கும் அவர்களுக்குக் கேரதீவுத்துறை நன்கு தெரிந்தது. வேகமாகப் பொங்கி மேலெழுந்து அடிக்கும் அலைகள் அவர்கள் மீது உப்புநீரை வாரி இறைக்கின்றது. அலையோடு துள்ளி வீதியில் விழும் மீன்வகைகள் துடிதுடித்து மீண்டும் கடலுக்குள் போய்விழும் காட்சியை நின்று இரசிக்க முடியாதவாறு விரைந்துசென்று அடிவானில் கிழக்கு வெளிக்கும் நேரம் கேரதீவுத் துறையை அடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலப்புடன் எந்நேரமும் விளங்கும் கேரதீவுத்துறை வெறிச்சோடிக் கிடந்தது. துறையின் அலுவலகமும் பூட்டப்பட்டு "வள்ள ஓட்டம் நிறுத்தப்பட்டுள்ளது". என்ற விளம்பரப்பலகை காணப்பட்டது. சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்த சரவணன் தன் தம்பியருடன் அங்கே கட்டப்பட்டிருந்த ஒரு தோணியின் கட்டுக்களை விலக்கித் தன் தம்பியர் இருவருடன் சங்குப்பிட்டித் துறைக்கு இடையில் உள்ள கடல் வெளியைத் தாண்டிக் கரையை வந்தடைந்தான்.

அங்கு அவர்கள் முற்றிலும் எதிர்பார்க்காத நிலைமை மரண பயத்தை ஏற்படுத்த அல்லோலப்பட்டனர்.தோணியைக் கரையை அணைக்க முற்பட்டவேளை வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. "கான்ஸ் அப்" கட்டளையோடு பல படைவீரர்கள் அருகே ஓடிவந்தனர். மூவரையும் இறக்கி விசாரணை செய்து துருவித் துருவிக் கேள்விகள் கேட்டனர். ஆங்கில மொழியிற் பேசக்கூடிய சரவணன் அவர்களுக்குத் தங்கள் நிலையை விளக்கவே பொறுப்பதிகாரி ஏற்கனவே முருகேசு உடையாரின் நெருக்கமானவன். அவரது பிள்ளைகள் என்று அறிந்தவுடன் அவர்களுக்குச் சூடான கோப்பி கொடுத்து உபசரித்துத் தனது ஜீப் வாகனத்தில் அவர்களுடைய கிராமத்துக்கு அனுப்பி வைக்கும் படி பணித்தான்.

மூன்றாவது நாளாகப் பெருங்குழப்பத்தில் இருந்த உடையார் வீட்டில் பிள்ளைகளின் வருகை பெருமகிழ்ச்சியைத் தந்தது. உடையாரின் பிள்ளைகள் வந்து சேர்ந்து விட்டார்கள் என்ற செய்தி கிராமமெங்கும் பரவியது. மக்கள் நகரப் புதினமறிய நிறைய வந்துபோய்க்கொண்டிருந்தனர். பிள்ளைகள் பட்ட அவலங்கள், நகரில் போராளிக் குழுக்களின் போட்டி நிலையால் பெரும் கலக்கமடைந்தார் உடையார். விடுதலைப் போராட்டமெனக் கிராமங்கள்தோறும் கருத்தரங்குகள்... ஆட்சேர்ப்புக்கள் கட்டாயப்படுத்தல்கள். இராணுவ ரோந்துக்கள்... சிந்தித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையாரும் மனைவியையும் ஒரு முடிவுக்கு வந்தனர். தம்பிள்ளைகளை இங்கு வைத்திருப்பது பாதுகாப்பில்லை என்ற முடிவுக்கு வந்தனர். தங்களுக்குத் துணையாக இளையவன் செந்திலை வைத்துக்கொண்டு சரவணனையும், தம்பியையும் மேற்குலக நாட்டுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டனர்.

தாய் தந்தையைப் பிரிய மனம் இடம் கொடாத நிலையில் அவர்கள் வற்புறுத்தலால் பயணத்தை மேற்கொண்டு கனடா நகரில் அகதிகளாகத் தஞ்சடைந்தனர். தமது அறிவாற்றலாற் சில மாதங்களில் அந்நாட்டின் குடியுரிமையையும் பெற்றுக்கொண்டனர்.

புலம்பெயர்ந்த நிலையில் அந்நாட்டுக் குடியுரிமையோடு வாழ்ந்த சரவணனுக்குத் தன் பிறந்த நாட்டு நிலைமைகள் பெரும் வேதனையைக் கொடுத்தது.

போராட்டம் பெரு வளர்ச்சி அடைந்து ஆங்காங்கே சுற்றி வளைப்புக்களும் மோதல்களும் நடைபெற்ற காலகட்டம் அது. பல மேலைத்தேய நாடுகளின் ஆதரவுடன் மோதல் நிறுத்தம் ஏற்பட்டு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

உடையாரின் மூத்தவன் சரவணன் தன் தாய் தந்தையரைப் பார்க்கப் பிறந்த ஊருக்கு வந்தான். உடையார் வீட்டிற் குதூகலம் சரசுவின் மகள் அவனது உறவுமுறை மச்சாளுக்கும், சரவணனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. சில நாட்கள் குதூகலமாகக் கழித்து சரவணன் மனைவியுடன் புறப்பட ஆயத்தமானான்.

"தம்பி சின்னவனை இஞ்சை வைச்சிருக்கிறது நல்லதாய்த் தெரியேல்ல அவனையும் கூட்டிக் கொண்டு போ" உடையார் கூறிய வார்த்தைக்குப் பதில் சொல்லாமல் ஊமையாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றான் "சரவணன். தம்பி. யோசிக்காதை. நான் முடிவெடுத்திட்டன்" உடையாரின் ஒரே குரல் தான் செய்யும் பெருந்தவறை உணராமற் பேசினார். தன் தம்பி. மனைவியுடன். சரவணன் சென்று வருடங்கள் பல கடந்தன.

முருகேசு உடையார் தன் அன்புத் துணைவியின் பிரிவால் துரும்பாய் இளைத்தார். கலகலப்பாக விளங்கிய வீட்டில் இப்போ யாரும் இல்லை. மூன்று ஆண் பிள்ளைகளைப் பெற்ற செல்லம்மாவுக்கு கொள்ளிவைக்க ஒரு பிள்ளை இல்லை" எண்ணியெண்ணி பெருமூச்சுவிட்டவண்ணம் பாயோடு ஒட்டும் நிலைப்படுத்த படுக்கையானார். சரசு மட்டும் அடிக்கடி தொலைபேசிச் செய்திகளை அனுப்பிக்கொண்டே இருந்தாள். தன் பிள்ளைகள் வருவார்கள் என்ற நம்பிக்கையில் அன்னம் தண்ணி இன்றிப் புரண்டார். உடையாருக்கு வருத்தம் கடுமையாம். சனங்கள் வாறதும், போறதுமாக இருந்தார்கள் மக்கள் வருவார்களா? ஊரவர்களின் கேள்வி. உடையாரின் கண்கள் நிலை குத்தி நிற்கிறது. அப்பாவுக்கு ஏதும் பிரச்சினை எண்டால் நாங்கள் வரமுடியாமல் இருக்கும். இரண்டு இலட்சம் மாமியின் பெயருக்கு அனுப்பியிருக்கு சரவணனின் செய்தி " தாய்க்கு வராத பிள்ளைகள் தகப்பனுக்கு வரப்போகினமே" கூடி இருந்தவர் கதை உடையார் காதிலும்.... அருகே இருந்தவர் தேவாரம் பாடுகிறார். அழுகுரல் ஒலிக்கிறது.

பூநகர்
பொன். தில்லைநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பிப் பசு

இன்று கார்த்திகைப் பௌர்ணமி நாள். அத்தோடு தீபத் திருநாளும் கூட நான்கு வருசத்துக்குப் பிறகு இன்று தான் எங்கடை இந்தக் கிராமத்தில் சில வீடுகளிலை செக்கலோடை வளவு முன்றலிலும், பனம் பாத்தியிலும் தோட்டப்பிட்டியிலும், மாட்டுத்தொழுவத்திலும் பிரகாசமான பந்தங்களை அயலவர்கள் ஏற்றி மகிழ்வதை முசுட்டைப்பிட்டி காணியில் அழிந்து போன வீடுகள் அப்படியே சிதைத்து கிடக்க மீள இடம் பெயர்ந்து வந்து அரசினால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தபடியே முருகேசர் அவதானித்தார். கிராமமெங்கும் மின் மினிப்பூச்சிகள் போல ஏற்றிவைக்கப்பட்ட பந்தங்கள் கண்சிமிட்டிக்கொண்டிருந்தன.

" அப்பு எல்லா வீடுகளிலும் பந்தம் கொழுத்தி எரியுது நாங்கள் இரண்டு பந்தங்கள் சரி கொழுத்தாட்டி ஊர் என்ன சொல்லும்" எங்கடை நிலையிலை இது தேவையே தம்பி. நாங்கள் எல்லாரும் போரின் கொடுமையைக்காரணம் காட்டி வெளியேற்றப்பட்டோம். என்ரை மனைவி, பிள்ளைகள் உயிரைப் பாதுகாத்திடுவோம். எண்டு உடமைகளையும் தூக்கி வீசியிற்று போனோம். முள்ளிவாய்க்காலிலை எல்லாம் பறிகொடுத்து தனிக்கட்டைகளாய் இங்கை தவிக்கின்றோம். ஒன்றும் அறியாத உன்ரை நடுவிலான் தடுப்பிலையாம். பார்க்க அனுமதி இல்லையாம். இந்த நிலையிலை எங்களுக்கு ஒரு தீபத்திருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் உன்ரை வேலையைப் பார். கடந்து போன, நடந்து முடிந்து விட்ட அந்தச் சோக சம்பவங்கள் மனைவியையும், மகளையும் கண்முன்னே மண்கிடங்கில் மூடிய அந்த சோக நிகழ்வு. மீண்டும் வந்த படுக்கையில் மரக்கட்டையாய் வீழ்ந்தான் சரவணன். கண்களில் இருந்து கண்ணீர் ஆறாக ஓடி தலை அணை நனைந்தவண்ணம் இருந்தது.

சரவணன் முருகேசுவுக்கு ஒரே மகன். நிறைந்த கமபுலங்களுக்கு உரித்தாளி. தன்மனைவி நேசத்தின் சிறப்பான விருந்தோம்பும் பண்போடு கமபுலங்களைச் செய்து சிறப்போடு வாழ்ந்த அந்தக் குடும்பம், போரின் கொடுமையால் சின்னா பின்னப்பட்டு நாடோடியாய் ஆறு மாதங்கள் இடத்துக்கு இடம்மாறி வன்னேரி, கிளிநொச்சி, தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம் என இடம் பெயர்ந்தனர். இறுதியாக முள்ளிவாய்க்காலில் மனைவி, பிள்ளையை மண்ணுக்கு விதையாக்கி தனிக்கட்டைகளாக தகப்பனும், மகனும். மீள்குடியேற்றம் என்ற போர்வையில் ஆசை வார்த்தைகளில் மோசம் போனவர்களாக ஆறுமாதமாகியும் எந்த உதவியும் கிடைக்காத குடும்பப்பட்டியலில் அவனும் ஒருவனாகி வாழத் துடிக்கிறான். வாழ முடியுமா? இவை அவன் முன் எழும் கேள்விகள்.

சற்று முன் நடைபெற்ற சம்பவத்தை கண்ணுக்கெட்டிய தூரத்தில் நடந்ததை பார்த்து வாளா வெட்டியாய் இருக்க முடியுமா? நாகதேவதுறைக்குச் செல்லும் பிரதான வீதியில் பல வீடுகள். சில வீடுகளில் மீளக் குடியேறுபவர்கள் இருந்தார்கள். கார்த்திகைத் தீபத்திருநாள் அல்லவா. தங்கள் இல்லங்களின் முன் வாழைக்குற்றிகள் நாட்டி கொப்பறாவில் தீச்சுடர்கள் ஏந்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. சொற்ப நேரத்தில் அங்கு வந்த மனிதாபிமானம் அற்றோரால் தீபத்திருநாளின் புனிதம் கெடுக்கப்பட்டது. வாழைக்குற்றிகள் பிடுங்கி வீசப்பட்டன. வீதியில் துண்டம் துண்டமாக வீழ்ந்த கொப்பறாத் துண்டுகள் தம் சக்தி உள்ளவரை எரிந்து கொண்டிருந்தன. இக்காட்சியெல்லாம் சரவணனை ஆயிரம் கேள்விக்கணைகள் மோதிநின்றன.

பௌர்ணமி நிலவு குடலையும் குருத்துமாக இருந்த பயிர்களை தடவிக்கொண்டு மோதும் வாடைக்காற்று ஜில் என்று விறைப்புக் கொட்டியது. உறக்கமும் வருவதாயில்லை.

சரவணப் பொய்கை இல்ல சுற்றாடலில் தெருநாய்களும் தொடர்ந்து அயல் வீட்டு நாய்களும் அட்டகாசமாக குரைத்தன. தூரத்தே உள்ளே ஒரு முதியவர் திட்டலும் உரப்பலும் கேட்டது.

விடயத்தைப் புரிந்து கொண்டவர்

" என் அநியாயம் மனிதப்பண்பு கெட்டுப்போச்சு"
நாலுவருசமாய் வெள்ளாமை இல்லை
குடலையும் குருத்துமாய் பயிர் கிடக்குது
மாட்டைக் கட்டாமல் விட்டிருக்கினம்
பாழ்படுவார் ஆர் செய்த வேலையோ"

முருகேசர் திட்டல் நின்றது. அதிர்ச்சிக்குள்ளானார் நாலுவருட காலமாக விசுவமடுவில் தவறிவிட்டு பிரிந்து போய் விட்ட கொம்பிப்பசு முருகேசர் அருகில் கதறிக் கதறி அழுதது. அவரை முகர்ந்து. முகர்ந்து நக்கியது. அ.....ம்.....மா.....வு.....ம்.....மதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் உன்ரை வேலையைப் பார். கடந்து போன, நடந்து முடிந்து விட்ட அந்தச் சோக சம்பவங்கள் மனைவியையும், மகளையும் கண்முன்னே மண்கிடங்கில் மூடிய அந்த சோக நிகழ்வு. மீண்டும் வந்த படுக்கையில் மரக்கட்டையாய் வீழ்ந்தான் சரவணன். கண்களில் இருந்து கண்ணீர் ஆறாக ஓடி தலை அணை நனைந்தவண்ணம் இருந்தது.

சரவணன் முருகேசுவுக்கு ஒரே மகன். நிறைந்த கமபுலங்களுக்கு உரித்தாளி. தன்மனைவி நேசத்தின் சிறப்பான விருந்தோம்பும் பண்போடு கமபுலங்களைச் செய்து சிறப்போடு வாழ்ந்த அந்தக் குடும்பம், போரின் கொடுமையால் சின்னா பின்னப்பட்டு நாடோடியாய் ஆறு மாதங்கள் இடத்துக்கு இடம்மாறி வன்னேரி, கிளிநொச்சி, தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம் என இடம் பெயர்ந்தனர். இறுதியாக முள்ளிவாய்க்காலில் மனைவி, பிள்ளையை மண்ணுக்கு விதையாக்கி தனிக்கட்டைகளாக தகப்பனும், மகனும். மீள்குடியேற்றம் என்ற போர்வையில் ஆசை வார்த்தைகளில் மோசம் போனவர்களாக ஆறுமாதமாகியும் எந்த உதவியும் கிடைக்காத குடும்பப்பட்டியலில் அவனும் ஒருவனாகி வாழத் துடிக்கிறான். வாழ முடியுமா? இவை அவன் முன் எழும் கேள்விகள்.

சற்று முன் நடைபெற்ற சம்பவத்தை கண்ணுக்கெட்டிய தூரத்தில் நடந்ததை பார்த்து வாளா வெட்டியாய் இருக்க முடியுமா? நாகதேவதுறைக்குச் செல்லும் பிரதான வீதியில் பல வீடுகள். சில வீடுகளில் மீளக் குடியேறுபவர்கள் இருந்தார்கள். கார்த்திகைத் தீபத்திருநாள் அல்லவா. தங்கள் இல்லங்களின் முன் வாழைக்குற்றிகள் நாட்டி கொப்பறாவில் தீச்சுடர்கள் ஏந்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. சொற்ப நேரத்தில் அங்கு வந்த மனிதாபிமானம் அற்றோரால் தீபத்திருநாளின் புனிதம் கெடுக்கப்பட்டது. வாழைக்குற்றிகள் பிடுங்கி வீசப்பட்டன. வீதியில் துண்டம் துண்டமாக வீழ்ந்த கொப்பறாத் துண்டுகள் தம் சக்தி உள்ளவரை எரிந்து கொண்டிருந்தன. இக்காட்சியெல்லாம் சரவணனை ஆயிரம் கேள்விக்கணைகள் மோதிநின்றன.

பௌர்ணமி நிலவு குடலையும் குருத்துமாக இருந்த பயிர்களை தடவிக்கொண்டு மோதும் வாடைக்காற்று ஜில் என்று விறைப்புக் கொட்டியது. உறக்கமும் வருவதாயில்லை.

சரவணப் பொய்கை இல்ல சுற்றாடலில் தெருநாய்களும் தொடர்ந்து அயல் வீட்டு நாய்களும் அட்டகாசமாக குரைத்தன. தூரத்தே உள்ளே ஒரு முதியவர் திட்டலும் உரப்பலும் கேட்டது.

விடயத்தைப் புரிந்து கொண்டவர்

" என் அநியாயம் மனிதப்பண்பு கெட்டுப்போச்சு"
நாலுவருசமாய் வெள்ளாமை இல்லை
குடலையும் குருத்துமாய் பயிர் கிடக்குது
மாட்டைக் கட்டாமல் விட்டிருக்கினம்
பாழ்படுவார் ஆர் செய்த வேலையோ"

முருகேசர் திட்டல் நின்றது. அதிர்ச்சிக்குள்ளானார் நாலுவருட காலமாக விசுவமடுவில் தவறிவிட்டு பிரிந்து போய் விட்ட கொம்பிப்பசு முருகேசர் அருகில் கதறிக் கதறி அழுதது. அவரை முகர்ந்து, முகர்ந்து நக்கியது. அ.....ம்.....மா.....வு.....ம்.....மதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கதறலுடன் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தது. பழைய குசினியினுள் ஓடி அட்டகாசம் செய்தது. முருகேசர் பலதசாப்தங்களாக பசுக்கூட்டத்தோடு பரீட்சயமானவர் என்பதால் கொம்பிப்பசுவின் உணர்வைப் புரிந்து கொண்டார். தடவிக் கொடுத்தார். தன் எசமானியம்மாவின் நேசத்தை பார்க்கத் துடிக்கும் வாய் பேசாச்சீவன். அதற்கு ஆறுதல் கூறமுடியமா? ஒவ்வொரு கன்றும் ஈனும் போதும் மூன்று நான்கு நாட்களுக்கு குத்துப்பச்சை அரிசிக் கஞ்சிகாய்ச்சி வைக்கும் தன் எசமானியம்மா நேசராணியை தேடிஅழும் கொம்பிப்பசுவுக்கு ஆறுதல் சொல்ல முடியுமா? இம்முறை கஞ்சி கிடைக்குமா?மனிதப் பண்புகள் அற்றுப் போன இக்கால கட்டத்தில் எங்கள் கொம்பிப்பசு, கோமாதா எங்கள் குலமாதா, நான்கு வருடத்தின் பின்தன் எசமானர்களைப் பார்க்க தன் பிள்ளைகளோடு வந்து சேர்ந்து கொண்ட கதை அதிசயத்தை ஊட்டுவதாய் அமைந்தது.

மறுநாள் தடுப்பில் இருந்த சரவணனின் மகனும் இன்னும் சிலரும் குற்றமற்றவர்களாய் விடுவிக்கப்பட்டு தன் குடும்பத்துடன் இணைந்து கொண்டனர். சரவணனின் மகன் தன்தாயின் கடமைகளை நிறைவேற்றினான். கொம்பிப்பசுவின் எசமானியம்மாவாக செயற்பட்டான். தீபாவளியும் போய் தீபத்திருநாளும் போய் திக்குத்திசைதெரியாமல் போகும் வாழ்க்கையில் போய் .....சா..... இனி என்ன? கொம்பிப்பசுபோல நாமும் நமது நன்னாளுக்காக காத்திருக்க வேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்குத் தாயாக வேண்டும்.

அம்மா .... அம்மா....அம்மா அவளுக்கு அது முதல் பிரசவம்... அதுதான் கன்னிப்பிரசவம். பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருக்கும் துவண்டு போய் தன் துன்பநிலையைப் போக்க ஆறுதல் கூற அவளைத் தேற்ற யாருமே இல்லையே அம்மா.... அம்மா இருந்தால் எனக்கு அருகில் இருந்து ஆறுதல் கூறி தேறுதல் கூறி என் துன்பத்தில் பாதியை குறைத்திருப்பாள் இப்படித்தான் நினைத்து வேகாமல் வெந்து கொண்டிருந்தாள் நிசா. அந்த வேற்று நாட்டு வைத்தியசாலையில் தன் மொழியைப் பேச முடியாதவர்களும், விளங்கிக் கொள்ள முடியாதவர்களும் தான் நிறைந்திருந்தார்கள். அவளுக்கு ஆறுதல் கூற எவருமில்லை அவளது கணவன் மட்டும் அந்த நாட்டின் சட்டப்படி அருகாமையில் இருந்து அவளின் வேதனையில் தானும் பங்கெடுக்கும் உரிமையோடு ஆறுதல் வார்த்தைகளை கூறி நின்றமை அவளது துன்பம் தெரியாத நிலையில் சுயநினை விழந்தாள் நிசா.

நிசா.....அவள் ..... அப்பாவுக்கும் அம்மாவுக்கும் செல்ல மகள் கூடவே இரு சகோதரர்கள் அண்ணனும் .. தம்பியும் இணை பிரியாத சகோதரர்களாக மூவரும் செல்வாக்குமிக்க குடும்பத்தில் செல்லப்பிள்ளைகளாக வளர்ந்து வந்தனர்.

நிசா ... தாய்க்கு ஒரே பெண்பிள்ளை செல்லமாக வளர்ந்த அவள் பள்ளி செல்லும் நேரத்தை தவிர தன் தாயை என்றும் பிரிந்திருந்ததே கிடையாது பிரிந்திருக்க விரும்பவும் மாட்டாள். அப்படித்தான் அவளின் பள்ளிக்காலமும் படிப்பும் கழிந்து கொண்டிருந்தது க.பொ.த.பரீட்சைக்கு தோற்றிய நிசா சிறந்த பெறுபேற்றைப் பெற்று உயர்தர வகுப்பில் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்தாள். படிப்பில் மட்டுமல்ல விளையாட்டுத்துறையிலும், நடனத்துறையிலும் அவளுக்கு நிகர் அவளே பள்ளி ஆசிரியர்களதும் வகுப்பு நண்பிகளதும் அபிமானம் பெற்றிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிசா பாடசாலையில் மாணவத் தலைவியாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்த காலகட்டம் அது அந்த நாட்களில் தாயக மண்ணில் இரண்டாம் கட்ட ஈழப்போர் உச்சக் கட்டத்தை அடைந்த துன்பகரமான நாட்கள் தாயக மண்ணில் நடைபெறும் நிகழ்வுகள் ஒவ்வொரு குடும்பத்தையும் நிலை குலையச் செய்தது.

சீரோடும்.... சிறப்போடும் வாழ்ந்த தமிழ்க்குடும்பங்கள் பெட்டி படுக்கையுடனும் .... உடுதுணியுடனும் .. உடுதுணி அற்றவர்களாகவும் தான் பிறந்த மண்ணை விட்டு... நேசித்த நில புலங்களை விட்டு அகதியென்ற கோலந்தாங்கி கிராமம்... கிராமமாய் அலைந்தநிலை இந்த இடப்பெயர்வு நிசாவையும் குடும்பத்தையும் சின்னா பின்னமாக்கியது அவர்கள் குடும்பத்தைப் போல் பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கும் இந் நிலையே ஏற்பட்டது.

பல குடும்பங்கள் பகல் இரவு தெரியாமல் சரியான முறையில் உணவு கூட கிடைக்காத நிலைக்கு ஆளானார்கள் உணவிருந்தும் உண்ணமுடியாமல், உறக்கமின்றியே தம் நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தார்கள். சீறிவரும் எறிகணைக் குண்டுகள் விண்ணில் இருந்து பரவலாய் வீசப்படும் கொத்துக்குண்டுகளுக்கு இரையாகி இரத்த வெள்ளத்தில் மிதக்கும் மனித உடல்கள் இத்தனையும் கண்டு... கேட்டு பீதியுடன் வாழ்ந்த நிசாவின் குடும்பத்தையும் சீரழித்தது சீறிவந்து தாக்கிய கொத்துக்குண்டுகள். அதே நாளில் பல நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அவர்களில் நிசாவின் தாயாரும் ஒருவராகி விட்ட நிலைமையால் யாரை பிரியாமல் கூடவே வாழ வேண்டுமென்று விரும்பிய தன் அன்புத் தாயை பிரிந்தாள் அபலையாகித் துடித்தாள். அவளுக்கு ஆதரவு கூற யாராலுமே முடியவில்லை. தாயின் பிரிவை தாங்கும் சக்தி இல்லாத நிலையில் துரும்பாய் இளைத்தாள். போரினால் சின்னா பின்னமாகிய நிசாவின் குடும்பத்திற்கு நோர்வே நாட்டில் அடைக்கலம் கிடைத்தது.

சகல ஆளுமையும் கொண்ட அவளுக்கு நோர்வே நாட்டின் சட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்களுக்கு அமைய வாழ்ந்ததால் அவளுக்கு அந்த நாட்டு குடியுரிமையும் கிடைத்தது அந் நாட்டு பாசையை பழத்து முதல் தரமாகத் தேறியதால் நல்ல தொழில் வாய்ப்பும் கிடைத்தது. ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்த அவளது சகோதரர்களும் ஒன்று சேர்ந்தனர் நல்லதோர் முகூர்த்தநாளில் நல்ல வரனைக் கைப்பிழத்த அவளின் வாழ்க்கையில் வசந்தம் வீசியது. பிரசவ வேதனையால் துடித்து அம்மா... அம்மா... என்ற குரலோடு மௌனித்த நிசா கண்விழித்த போது தன் அருகில் ஒரு அழகிய பெண்குழந்தையின் மெல்லிய அழுகுரல் ஒலி...கேட்டுக் கொண்டிருந்தது. அப்போ....பூரண சுயநினைவு பெற்றபோது தன் இருகையை மேலே கூப்பி ஒன்றை மட்டும் இறைவனிடம் வேண்டினாள். என்னைப்போல் சிறுவயதில் தாயைப் பறிகொடுத்தவர்கள் யாருமே வாழ்க கூடாது அது.. விதியா? .... இல்லை சதியா? இல்லை...இல்லை... அரக்கர் குணம் படைத்தவர்களின் அராஜகமா? மனித உயிர்களுக்கு மதிப்பு வேண்டும் அவ்வுயிர்கள் யாராலும் அழிக்கப்பட கூடாது. இதற்கு முழவு வேண்டும். இறைவா! நான் தாய்மை அடையும் போது ஏற்படும் துன்பம்... துயரம் எந்த ஒரு பெண்ணுக்கும் ஏற்படக் கூடாது என் செல்ல மகள் தாய்மை அடையும் போது அவள் அருகே நான் இருந்து தாய்க்கு தாயாக பணிசெய்ய அருள்தா என வேண்டி தன் செல்லமகளை அன்போடு தன் இறுக அணைத்து அவள் செவ்விதழ்களில் இதனில் தன்னை மார்பகக்கத்தைப் புதைத்து மகிழ்ந்தாள் நிசா.

யாவும் உண்மையுடன்
கலந்த கற்பனையே

பூநகர். பொன். தில்லைநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலை இலக்கியப் பயணத்தில் இதழாசிரியர்

இச் சிறுகதை ஆசிரியர் பூநகர் பொன். தில்லைநாதன் அவர்கள் சிறந்த ஆசிரியராக, அதிபராக அரச பணியாற்றியதுடன் பூநகரியின் முதல் உதவிக்கல்விப் பணிப்பாளர் என்ற பெருமைக்குரியவர் ஆவார். சிறந்த சமூக சேவையாளராக, நாடக நடிகனாக, சிறுகதை ஆசிரியராக, சாரணிய சேவையாளனாக, ஊடகத்துறையாளனாக, பேச்சாளராக, கலைஞனாக.... என்று பல்வேறு தளங்களிலே தடம்பதித்து தனித்துவமாகச் சிறப்பு மிக்க பூநகர் மண்ணின் பெருமையினை எடுத்தியம்பிய கலைஞர்களில் ஒருவராக திகழ்கின்றார்.

இவரது கலைச்சேவையினைப் பாராட்டி 2011 ஆம் ஆண்டு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் கலாபூசணம் விருதினையும் பூநகரி பிரதேச செயலகம் 2012 ஆம் ஆண்டு கலைநகரி விருதினையும், 2012 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட செயலகம் கலைக்கிளி விருதினையும் வழங்கியுள்ளது.

வயது முதிர்ந்த வயோதிபர்களின் இன்றைய நிலைமை யினையும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவனாகி அவர்களின் பரந்துபட்ட மனக்குமுறல்களை தனது அறிவார்ந்த தேடலின் மூலம் கலைச்சுவையினைக் கலந்து இன்புற வைப்பதாக இச் சிறுகதைத் தொகுப்பு அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.
இவரின் மூன்றாவது நூலினை மிகவும் பாராட்டுவதுடன் இன்னும் பற்பல நூல்களை வெளியிட்டு பூநகரி மண்ணினைச் சிறப்படையச் செய்வதோடு சிறந்த கலைஞராக என்றும் வளர இவரை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திருமதி. சுசிகுமார் சர்மிளா
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் பூநகரி.

noolaham.org | aavanaham.org